


கொலையோடிய நாள்!



மீண்டும் மூள்கிறதா தமிழக – கேரள யுத்தம்..?

டிசம்பர் 11 - டிசம்பர் 17, 2011 December 11 - December 17, 2011 பக்கங்கள் -28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA
# சுடர் ஒளி
THE SUDAROLI
வாரமலர்



# இந்திய சீனப் பனிப்போரில் இலங்கைத் தமிழர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலையாடிய நாள்

## 2011 இல்...

டிசம்பர் 3 அதிகாலை.

முல்லைத்தீவு மாவட்ட பழைய கிராமங்களின் கதைகளை நோக்கிய தீவிரத் தேடலை முடுக்கிவிட்டிருந்தேன். என் மேசை முழுவதும் ஆடைதிறந்திருந்த புத்தகங்கள் வெறுப்பை காறித் துப்பின. நான் தேடிக் கொண்டிருக்கும் முல்லைத்தீவின் இறுதிக் கிராமமான ஒதியமலையைப் பற்றி எந்தப் புராதன செய்திகளும் இருக்கவில்லை. ஒதிய மலைக் கிராமத்தில் ஒரு பழைய மலையும், கி.மு 3ஆம் அல்லது 2ஆம் நூற்றாண்டுகளுக்குரிய தமிழ் பிராமி எழுத்துக்களும், அழிபாடடைந்த கட்டட எச்சங்களும் இருப்பதாக 1889 ஆம் ஆண்டில் பாக்கர் என்ற ஆய்வாளர் பதிவு செய்திருக்கின்றார். இந்தக் கண்டுபிடிப்பை மட்டும் தான் அதிகாலை மூன்று மணியிலிருந்து ஆறு மணிவ ரைக்குமான என் அபூர்வத் தேடல் கண்டுபிடித் திருந்தது. அறையை வெறுத்து என் உடல் ஊனத்தை வெளிக்குத் தள்ளினேன். விறாந்தை மேசையில் குவிந்து கிடந்த பத்திரிகைகளின் சடசடப்பு விடுப்பிறியும் உணர்வுத் தூண்டலை என்னுள் ஏற்படுத்தியது. தலைப்புச் செய்திகளை மட்டும் மேயும் பழக்கத்தினால் விரைவான வாசிப்பு ஓரிடத்தில் தடைப்பட்டது. 'ஒதிய மலைப் படுகொலை நினைவு தினம் நேற்று உணர்வு பூர்வமாக அனுஸ்டிப்பு' அட இதையும் மறந்து போனனே..

என் பழைய கிரமங்களைப் பற்றிய தேடல் என்னிலிருந்து கழன்று கொண்டது.

## 1984 இலும் அதற்கு முன்னும்.

ஒதியமலைப் படுகொலை.

புதியதொரு கொலை நினைவுத் தேடலை தொடங்கி வைத்தது.

தமிழ் பிராந்தியத்தின் முடிவுக்கிராமங்களான கொழும்பு தமிழ் முதலாளியின் 500 ஏக்கர் ஹென் பாம், மாவிட்டபுரம் தமிழ் முதலாளியின் 500 ஏக்கர் டொலர் பாம், தம்பு றொபினினுடைய 1000 ஏக்கர் சிலோன் தியேட்டர், அல்வாய் தமிழ் முதலாளியின் 1000 ஏக்கர் சரஸ்வதி பாம், நீதி ராஜாவின் யானை பீடி கொம்பனி பாம், தனித் தமிழ் உரிமையாளர்களுக்குரிய தனிக்கல்லு, பட்டிக்குடியிருப்பு, ஒதிய மலை போன்றன 1980களில் மிகத் தீவிரமாகச் சிங்களமயப் பட்டுக் கொண்டிருந்தது. அனைத்தும் தமிழர்களின் கிராமங்களாக இருந்த போதிலும் அப்போது இந்நிலங்கள் பொரும்பான்மையினருக்குத் தேவையாகவிருந்தது. வெலியோயா, மகாவலி அபிவிருத்தி, குடியேற்றத்திட்டங்கள் திட்டமிடப்பட்ட வகையில் அரங்கிற்குள் பிரவேசித்திருந்தன. இந்தக் கிராமத்துத் தமிழ்க்குடிகள் உறக்கத்திலிருக்கும் சந்தர்ப்பங்களில் சிங்கள மக்கள் திருட்டுக் குடியேற்றங்களை விரைவுபடுத்தினர். தொன்மைக் குடியில் வந்த குணம் இந்த அடிபணிதலுக்கு இடம் கொடுக்கவில்லை. மல்லுக்கு நின்றது. இடியன்களும், சொட்கன்களும் பதிலுக்கு எப்போதும் தயாராயிருந்தன. சிங்களவர்களும் விடுவதாக இல்லை. எப்படியாவது துரத்தி விடவேண்டும். இரவிரவாக வந்து தமிழ் ஆண்களைப் பிடித்துச் சென்றனர். வீட்டோடு சேர்த்துக் கொழுத்தினர். கடைகளை, வீடுகளை, வயல் நிலங்களை, மந்தைகளைச் சூறையாடினர். திடீர் திடீரென காடுகளுக்குள் இருந்து வரும் பச்சை உடையணிந்த மனிதர்கள் அக்கிராமத்தவர்களை வெட்டிசாய்த்தனர். ஒரே வீட்டில் சாவுக்கு மேல் சாவு விழுந்து நொருங்கிய போதிலும், தலை வெளியே காட்டினால் மரணம் என்ற நிலை தொடர்ந்த போதிலும் அந்த கிராமத்தவர்கள் நிலம் பெயர மறுத்தனர். அவர்களுக்கு வயல்களையும், காடுகளையும், மாடுகளையும் தவிர வேறு என்ன தெரியும். வாழ்வோ? சாவோ? எதுவானாலும் இந்த மண்ணோடு தான் என்றிருந்து விட்டனர்.

■ ஜெரா

## 1983 இல்....

தமிழ் இரத்தத்தினால் காலம் கைகழுவிய ஆண்டு. நகரங்களின் வாழும் உரிமையை கொலைகளால் கிழித்த காலைகளை அதிகமாக கொண்டிருந்த காலம். தமிழ் இளைஞர்களை சோதனைக்குள்ளாக்கிய சம்பவங்களை தொடர்ச்சியாக கட்டவிழ்த்த காலம். இந்த அறிமுகம் பல தமிழ் இளைஞர்களை சிறைகளுக்குள் தள்ளியது. அதில் பலர் போராடுதலுக்காய் பிறந்தவர்கள். குட்டிமணி, தங்கத்ததுரை, ஜெகன் போன்றவர்கள் அநீதிகளுக்கெதிராகப் சமராடி சிறைகளை அனுபவிக்கத் தொடங்கினர். சிறைக்கூடங்களுக்குள்ளும் இவர்களின் விடுதலைத் தீ பிரகாசித்தமையை பெரும்பான்மை மனம் பொறுத்துக் கொள்ளவில்லை. விடுதலையை அனுபவிக்க போராடிய அனைத்து உறுப்புக்களையும் கோரமாக கொலைசெய்ய ஒரு குழுவைத் தயார்செய்தது. கோரக் குழுவும் தயார். அந்தக் குழு குட்டிமணி, தங்கத்துரை உள்ளிட்டவர்களை கொடூரமாகச் சிறைகளுக்குள்ளேயே வெறியாடியது. சிறைக்கு வெளியேயும் தமிழ்ப் பலிக்காக முகம் சிதைந்த குழுக்கள் அலையவிடப்பட்டிருந்தன. அவர்கள் எப்போதும் கொலைவெறியினால் மூடப்பட்டிருந்தனர். 1983 இல் அவர்களின் உச்சக் கட்டப் பணிகள் தீவிரமாகின. ஆயிரக்கணக்கான தமிழ் உயிர்கள் இந்தக் குழுவின் பசியடங்க தேவைப்பட்டனர். 83, யூலையில் பசியும் அடங்கியது. சர்வதேச சட்டம் எதையும் விட்டுவிடாததால் இந்தக் குழுக்களுக்கும் வழக்குகள், விசாரணைகள் அவசியமாயின. அது கொஞ்சக் காலம் தான். வெகு விரைவில் திறந்த வெளி சிறைகளுக்கு மாற்றப்பட்டனர். அந்தச் சிறைகள் மணலாற்றின் எல்லைக் கிராமங்களிலே உருவாகின. இடையில் ஒரு காடு. அந்தக் காடுதான் சிறையின் ஒரு பக்க பாது காப்புச் சுவர். அதைக் கடந்தால் ஏற்கனவே துரத்தப்படக் காத்திருக்கும் தமிழ்க் கிராமங்களுக்குள் நுழையலாம். கொலைக் குழுவின் கூப்பிடு தூரத்தில் தமிழ்க் கிரமாமங்கள். வேட்டையை ஆரம்பித்தனர். திறந்த வெளிச் சிறை வாழ்க்கையை அனுபவிப்பதாகக் காட் டப்பட்ட இந்தக் குழுவினர் சதா காலமும் மூடிய காடுகளுக்குள்ளேயே கொலைகளைத் தேடினர். மாடு சாய்க்கவும், வேட்டைக்காகவும் செல்லும் இந்த எல்லைக் கிராமத்தின் ஆண் மகன்களின் தலைகள் கொலைகளுக்காய் பயன்படுத்தப்பட்டன. மரங்களில் ஏறி மறைந்திருக்கும் சிறைவாசிகள் தமிழ் தலைகளைக் கண்டதும் லாவகமாகப் பாய்ந்து அவர்களின் தலை களை அறுத்தெடுத்து முண்டமாக்கி விடுவர். உடனேயே தமிழ் முண்டத் தின் ஆடைகளைக் களைந்து தாம் அணிந்து கொண்டு, தமது சிறை யாடைகளை முண்டங்களுக்கு அணிவித்து விட்டு சென்று விடுவர். பின்னர் அந்த தமிழ் முண்டங்கள் மிருகங்களுக்கு கறியாகி விடும். இந்தக் கொலை முறை குறிப்பிட்ட எல்லைக்கிராமங்களில், திறந்த வெளிச் சிறைகள் அமைக்கப்பட்ட காலத்திலிருந்து தொடர்ச்சியாக நிகழ்தேறி வந்தது. சாவுகளின் எல்லை மீறலைக் கண்டு கொதிப் படைந்த தமிழ் சனங்கள் தமது மரபு வழிவந்த ஆயுதங்களுடன் காடுகளுக்குள் இறங்கினர். பலியெடுத்தவர்களை பழி தீர்த்து விட்டு மறுநாள் அதிகாலையே ஊர் திரும்பினர். இதற்கு பதிலடி கொடுக்க சிறைக்குழு ஆயுதம் தாங்கியவர்களோடு சேர்ந்து தயாரானது.

### கொலை அனுபவம் 1

அன்றைய தினம் காலை 6.30 மணியளவிலே எமது கிராமத்திற்குள் புகுந்த இலங்கை இராணுவத்தினர் எமது கிராமத்தை நான்கு பக்கத்தாலும் சுற்றிவளைத்து, எமது கிராம மக்களில் கண்ணிற்பட்டவர்களையெல்லாம் பிடித்து ஓரிடமாக்கி அவர்களது மேலங்கியைக் கழற்றி அதனைக்கொண்டு அவர்களது கைகளைப் பின்பக்கமாகக் கட்டி ஒதியமலைக் குளக்கட்டருகே கொண்டு வந்தனர். அந்த நேரத்திலே அவ்வீதியாற் சென்ற செல்வராசா என்பவரது உழவு இயந்திரத்தை மறித்து அதிலிருந்தவர்களையும் பிடித்து கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்திற்குக் கொண்டு சென்றார்கள். சிறிது நேரத்தின் பின் அலறல் சத்தமும் அதைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தமும் கேட்டது. அத்துடன், பிடித்தவர்களில் வயோதிபர்களாகப் பார்த்து கணபதிப்பிள்ளை, பொன்னம்பலம், சின்னையா, கனகையா, ஆகியோரைத் தங்களது பாதுகாப்பிற்காக அவர்களுடைய பண்ணைக்கு எனது உறவினர் ஒருவரின் உழவு இயந்திரத்தில் ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டார்கள். இராணுவம் வந்ததை அறிந்து காட்டுக்குச் சென்றிருந்த நான் பின்னர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தினுள் ஓடிச்சென்று பார்த்தபோது மூன்று நான்கு பேராக நிறுத்தி வைத்து இருபத்தி ஏழு பேரையும் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்திருப்பதைக் கண்டேன். நான் பார்த்த பொழுது குற்றுயிருடன் இருந்த சிலரும் தண்ணீர் தண்ணீர் எனக் கேட்டுக் கொண்டு இருந்ததையும் கண்டேன். பின்னர் அவர்களில் கால் வேறு, தலை வேறாக இருந்தவர்களை சீராக கட்டடத்தின் இரு மருங்கும் அடுக்கி விட்டு அங்கிருந்து கால்நடையாக முல்லைத்தீவு நோக்கி ஓடினோம். இறந்தவர்களது கைகள் கட்டப்பட்ட நிலையில் அவர்களது கண்கள், காதுகள், மூளைகள் வெளியியே தெரிந்தன. பின்னர் முழுக் கிராமத்தினரும் சேர்ந்து கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு முன்பாக பெரிய மரங்கள் போட்டு அதன் மேல் அவர்களை அடுக்கித் தீ மூட்டினோம்.

ஒதியமலை - கந்தசாமி

## 1984-12-02 காலை 6 மணியிருக்கும்.

ஒதியமலை கிராமம் சாதாரணமாய் விடிந்தது. இரண்டு நாட்களுக்குள் அங்கு நடைபெற்ற திருமண நிகழ்வின் வாசனை அந்தக் காலையிலும் வீசிக்கொண்டிருந்தது. அவ்வேலையில் கிராமத்துக் காடுகளுக்குள் இருந்து 'இயக்கப் பெடியன்களின்' சாயலில் வெளிப்பட்ட மனிதர்கள், 'பெடியன்களைப்' போலவே ஆண்கள் அனைவரையும் பொது நோக்கு மண்டபத்துக்கு அழைத்துச் சென்றனர். புது மாப்பிள்ளையும் போனான். மண்டபத்துக்குள் நுழைந்ததும் அவர்களின் கைகளும், கண்களும் கட்டப்பட்டன. வரிசையாக நிறுத்தி வைத்து உறுப்புக்களை கடித்துக் குதறினர். 28 பேரை அவ்விடத்திலேயே நெற்றியில் சுட்டுக் கொண்டனர். மிகுதி நான்கு பேரை ட்ரக்டர்களில் ஏற்றி காட்டுக்குள் கொண்டு சென்று கொன்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய சீனப் பனிப் போரில் இலங்கைத் தமிழர்கள்

■ சந்திரசேகர ஆசாத்

ஒரு காலத்தில் அமெரிக்க சோவியத் பனிப் போர் உச்சக்கட்டத்தில் இருந்தது. அமெரிக்காவும், சோவியத் யூனியனும் ஒரு புறம் போட்டி போட்டுக் கொண்டு நவீன ஆயுதங்களை உருவாக்கிக்கொண்டிருந்த போதிலும் மறுபுறம் விண்வெளி ஆய்வுகளும், சாதனைகளும் மாறிமாறி நிகழ்த்தப்பட்டுக்கொண்டிருந்தன. இந்த இரு நாடுகளும் நேரடியாக மோதிக்கொள்ளாத போதிலும் உலகில் நடக்கும் விடுதலைப் போராட்டங்களிலும் இவற்றின் கரங்கள் படர்ந்திருந்தன. ஒரு தரப்பு அரசின் பக்கம் நின்று அரசுக்கு சகலவித உதவிகளையும் செய்தால் மறுதரப்பு போராட்ட அமைப்புகளுக்கு சகல உதவிகளையும் வழங்குவது ஒரு கட்டாய நடைமுறை போன்று பேணப்பட்டு வந்தது.

தென் வியட்னாம் ஆட்சியாளர்களுக்கு அமெரிக்கா சகல வித மான உதவிகளையும் வழங்கியது மட்டுமின்றி நேரடியாகவே தனது படைகளை இறக்கி வியட்நாம் விடுதலைப் போராட்டத்தினை நசுக்க முயன்ற வேளையில் சோவியத் யூனியன் வியட்நாம் போராளிகளுக்கு பொருளாதார ஆயுத உதவிகளை வழங்கியது. இவ்வாறே ஆப்கானிஸ்தானில் நஜிபுல்லா ஆட்சிக்கு ஆதரவாக சோவியத் யூனியன் படைகளை இறக்கிப் போரிட்ட போது அமெரிக்கா முஜாஹிதீன், தலிபான் ஆகிய அமைப்புகளுக்கு ஏராளமான உதவிகளை வழங்கி அவர்களின் வெற்றிக்குப் பெரும் பங்களித்தது. இவை மட்டுமின்றி கொரியாப் போரிலும் அமெரிக்கப் படைகள் தென் கொரியப் பக்கமும் அன்றைய சோவியத் நின் நட்பு நாடான சீனாவின் படைகள் வட கொரியா பக்கமும் நின்று போராடின. மேலும் ஆபிரிக்க நாடுகளில் இடம் பெற்ற பல விடுதலைப் போராட்டங்களில் இரு நாடுகளின் கரங்களும் எதிரெதிராகப் பங்களித்தன. ஆனால் சோவியத் யூனியன் பல துண்டுகளாகச் சிதறிச் சிதைவடைந்த பின்பு அமெரிக்க - ரஷ்யப் பனிப் போர் ஒரு முடிவுக்கு வந்தது.

அப் பனிப்போர் முடிவுக்கு வந்து விட்டாலும் அமெரிக்காவின் உலக மேலாதிக்கத்திற்கு அச்சுறுத்தலாக ஈராக், ஈரான், லிபியா போன்ற நாடுகளின் தேசிய எழுச்சியும், அல் கொய்தா, தலிபான் போன்ற போராட்ட அமைப்புகளின் வளர்ச்சியும் முன்னணிக்கு வந்தன.

எனவே அமெரிக்கா உட்பட மேற்குலகின் பரம வைரிகளாக முஸ்லிம் தேசியவாதிகளும், முஸ்லிம் அடிப்படை வாதிகளும் மாற்றம் பெற்றனர். எனவே அமெரிக்கா பனிப்போர் என்ற கட்டத்திலிருந்து வெளியே வந்து நேரடிப் போரில் இறங்கியே தனது உலக மேலாதிக்க நிலையை நிலை நிறுத்த வேண்டி ஏற்பட்டு விட்டது.

பனிப்போர் காலத்தில் சோவியத் சார்பு நிலைப் பாட்டை எடுத்த இந்தியா ஆசியாவில் அமெரிக்க மேலாதிக்கத்துக்கு ஒரு சவாலாகவே விளங்கி வந்தது. அக்காலத்தில் அமெரிக்கா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளை தனது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் வகையில் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தது.

ஆனால் சோவியத் யூனியனின் உடைவு, இந்திரா காந்தியின் இறப்பு என்பனவற்றின் பின்பு இந்தியாவின் பொருளாதார அடிப்படையில் ஏற்பட்ட மாற்றங்கள் அமெரிக்காவை நோக்கி அதைத் திருப்பின. இன்று ஆசிய ஆபிரிக்கப் பிராந்தியத்தில் சீனப் பொருளாதார அரசியல் விரிவாக்கத்திற்கு எதிராகப் போட்டியிடும் அமெரிக்காவின் நம்பிக்கைக்குரிய நண்பனாக இந்தியா உருவாகி வருகிறது. எனவே பனிப்போரின் மையம் இன்று ஆசிய ஆபிரிக்கப் பிராந்தியத்தில் இந்திய சீனப் போட்டியாக நிலை கொண்டுள்ளது. இன்று இந்தப் பனிப்போர்க்களங்களின் ஒரு முக்கிய களமாக இலங்கை விளங்கி வருகிறது.

இலங்கைத் தீவின் அமைவிடம் காரணமாகவும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் கடல்வழிப் போக்குவரத்தின் மையமாக விளங்குதலும் அரசியல், இராணுவ, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த கேந்திர நிலையமாக விளங்குவதாலும். இரண்டாம் உலகப் போரின் போது இலங்கை தென்னாசியப் பிராந்தியத்தில் பிரிட்டனின் பிரதான கட்டுப்பாட்டு மையங்களாகக் கொழும்பும், திருகோணமலையும் விளங்கியமையும் அவை ஜப்பானிய விமானங்களால் தாக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.


1977ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி முழுமையான ஒரு மேற்குலக சார்பு நிலைப் பாட்டையே எடுத்தது. அப்போது சோவியத் சார்பு நிலைப் பாட்டில் இருந்த இந்தியாவுக்கு அது சினத்தை மூட்டியது. எனவே 1983ல் இலங்கையில் இடம் பெற்ற கொடிய இன அழிப்புக் கலவரத்தை அடுத்து தமிழ் இளைஞர்கள் பெருமளவில் ஆயுத அமைப்புகளை நாடினர். இதை நன்றாகப்பயன் படுத்திக் கொண்ட இந்தியா விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய அமைப்புகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பயிற்சிகளை வழங்கி, ஆயுத பொருளாதார உதவிகளை வழங்கி பலமான சக்திகளாக வளர்த்தெடுத்தது. இலங்கை இராணுவத்திற்கு பிரதான தாக்குதல்களைத் தொடுத்து அவ்வமைப்புகள் நெருக்கடி கொடுத்தன.

இலங்கை அரசு அமெரிக்காவுக்கு திருமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களை 30 வருடக் குத்தகைக்குக் கொடுத்தமை, இலங்கைத் துறைமுகங்களில் அமெரிக்கக் கப்பல்கள் தரித்துச் செல்ல அனுமதி வழங்கியமை என்பன, இந்தியாவை மேலும் பெருகூட்டின! ஒப்பரேசன் லிபரேசன் நடவடிக்கையை அடுத்து தமிழ் மக்களைப் பாதுகாப்பது என்ற பேரில் இலங்கை இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டு இந்திய அமைதிப்படை இங்கு இறக்கப்பட்டது.

அதாவது தமிழ் மக்களைக் காப்பாற்றுவது என்ற பேரில் இந்தியா இலங்கை அரசைத் தனது பிடிக்குள் கொண்டு வந்தது. அந்த விஷயத்தில் வெற்றி பெற்றதும் விடுதலைப் புலிகளை அழிக்கும் பணியை தானே பொறுப்பேற்றுக் கொண்டது.

இன்று இந்தியா அமெரிக்காவுடன் நெருங்கிய உறவுகளைப் பேணி வரும் போதும் இலங்கை அரசை தன்னை மீறிச் செல்லாமல் இருக்க இனப்பிரச்சினையையே ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறது. அமெரிக்காவும் இன்றுவரை இலங்கைத் தமிழர் பிரச்சனையை இந்தியாவின் ஊடாகவே கையாண்டு வருகிறது. இலங்கை சீனாவின் பக்கம் சாய்ந்து விடாமல் பார்க்கும் வலு இந்தியாவுக்கு உண்டு என நம்பப் படுகிறது.

இலங்கையில் சிங்கள மக்களைப் பொறுத்தவரை இந்தியா ஒரு ஆக்கிரமிப்பு நாடு என்ற கருத்தோட்டமே நிலவி வருகிறது. இது மகாவம்சம் முதல் இன்றுவரை அம்மக்களிடம் ஊட்டப் பட்டு வருகிறது. ஆனால் இலங்கையில் 1956ல் ஏற்பட்ட தேசிய எழுச்சியும், அதற்கு எதிராக மேற்கு நாடுகள் மேற்கொண்ட நடவடிக்கைகளும், அந்நாட்களில் சீனா இலங்கைக்கு வழங்கிய உறுதியான ஆதரவும் சீனாவை ஒரு நம்பிக்கைக் குரிய நட்பு நாடாகவே சிங்கள மக்களின் மனங்களில் உருவாக்கிவிட்டன. 1977ம் ஆண்டு 1988, 1989 ஆண்டுகளில் இடம் பெற்ற ஜே.வி.பி.யின் கிளர்ச்சிகளை அடக்க இந்தியப் படைகள் நேரடியாகக் களமிறக்கப்பட்டமையும் இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் இந்திய அமைதிப் படை இங்கு வந்திறங்கியமையும் சிங்கள மக்களுக்கு இந்தியா தொடர்பான அச்சத்தையும், வெறுப்பையும் மேலும் வளர்ப்படுத்தின.




இந்திரா காந்தி காலத்தில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தினைப் பலப் படுத்துவதன் மூலம் இலங்கையை நெருக்கடிக்குள் தள்ளி இந்தியாவின் கட்டுக்குள் வைத்திருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பு நிலைமை தலைகீழாகியது. விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதில் இந்தியா முனைப்புடன் செயற்பட ஆரம்பித்தது. அவ்வகையில் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்குமிடையே இடம்பெற்ற போரில் இந்தியா முழுவீச்சுடன் இலங்கைக்கு ஆதரவு வழங்கியது.

நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சுகள் இடம்பெற்ற பொழுது விடுதலைப் புலிகளின் கப்பல்கள் தொடர்பான உளவுத் தகவல்களை இலங்கைக்கு வழங்கி அவற்றை அழிக்க உதவியதன் மூலம் இந்தியா பேச்சுக்களைக் குழப்ப எடுத்த முயற்சிகளை நாம் மறந்து விட முடியாது. எப்படியிருந்த போதிலும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான இலங்கையின் போரை இந்தியா தனது சொந்தப் போராகவே நடத்தியது. விடுதலைப் புலிகளை அழிப்பதன் மூலம் இலங்கை தொடர்ந்து சீனாவின் பக்கம் சாய்வதைத் தடுத்து தனது கட்டுக்குள் வைத்திருக்க முடியும் என எதிர்பார்த்தது. ஆனால் போர் முடிந்த பின்பும் இலங்கை தனது சீனச்சார்புத் தன்மையில் உறுதியாகவே நின்றது.

எனவே மேற்குலகம் இறுதி நாட்களில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமைமீறல்கள் தொடர்பாக இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன. ஆனால் இந்தியாவோ அவற்றிலிருந்து இலங்கையைப் பாதுகாப்பதன் மூலம் இலங்கையைத் தனது ஆதரவு சக்தியாக வைத்திருக்க முயல்கிறது.

ஆனால் சீனாவோ இலங்கையின் உள்கட்சி விவகாரங்களில் தலையிடாதிருப்பது போன்ற ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு துறைமுகங்கள், பெருந்தெருக்கள், மின்சார நிலையங்கள் என இலங்கையில் தனது காலை ஆழமாகப் பதித்து வருகிறது. சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு பிரச்சினைகள் எழும்போது மட்டும் மிக அமைதியான முறையில் இலங்கையைக் காப்பாற்றி வருகிறது.

இந்தியாவோ இலங்கை இனப்பிரச்சினையில் தமிழர்களுக்குச் சார்பாக நடப்பது போன்ற ஒரு மாயையை ஏற்படுத்திக் கொண்டு இப் பிரச்சினையில் இலங்கை ஆட்சியாளர்களின் விருப்பத்திற் கேற்ப செயற்படுவதன் மூலம் இலங்கை சீனா பக்கம் சாய்வதைத் தடுக்க முயல்கின்றது. சீபா உடன்படிக்கை போன்றவற்றாலும் வடபகுதிப் புகையிரதப் பாதை அமைப்பு, காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி, வட கடலில் எண்ணெய் அகழ்வு போன்றவற்றின் மூலமும் இலங்கையில் தனது நிலையை பலப்படுத்த முனைகிறது.

இன்று இந்தியாவைச் சூழவுள்ள மியன்மார், பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் சீனாவின் செல்வாக்கு அதிகமாகவே உள்ளது. இலங்கையிலும் அப்படியான ஒரு நிலைக்கான சாத்தியம் உண்டு. பாகிஸ்தான் தவிர்ந்த ஏனைய நாடுகளில் இந்தியாவுக்கு போட்டியாக சீனாவும் ஆதிக்கம் செலுத்த முயன்று வருகிறது. எனினும் இலங்கையில் கேந்திர முக்கியத்துவம் காரணமாக இந்திய சீன பனிப் போரின் மையமாக இலங்கையே விளங்கி வருகிறது.

இந்தப்பனிப்போரில் தமக்கும் சாதகமான நிலையைத் தோற்றுவிக்க இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தையே பகடைக்காயாக இந்தியா பயன்படுத்துகிறது. மேற்குலகின் போர்க்குற்ற நெருக்கடிகளிலிருந்து இலங்கையைப் பாதுகாப்பதன் மூலம் இலங்கையுடனான உறவை நெருக்கமாக்க முடியும் என இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் நம்புகின்றனர். எனவே இந்தியா தனது நலன்களின் அடிப்படையில் தமிழர் உரிமைகளைப் பலி கொடுத்து தமிழர் மீது ஒரு போலித்தீர்வைத் திணிக்கலாம் அல்லது இப்பிரச்சினையை தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கலாம். இந்த அடிப்படையை நன்றாகப் புரிந்து கொண்டு தமிழ் மக்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் தமது காய்களை நகர்த்துவது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

11, டிசம்பர் -17 டிசம்பர், 2011

98, வேலக மகாவித்தியாலய மாவத்தை,
கொழும்பு-14, தொலைபேசி: 0115738005
பக்ஸ்: 0115687944 -5
E-mail: editorial@sudaroli.com


## கூட்டமைப்பு செயற்பட வேண்டிய இரண்டு தளங்கள்!

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அரசாங்கம் மேலும் காலங்கடத்தும் தந்திரோபாயத்தைத் தொடர்வதாகவே தெரிகின்றது. தளர்வடைந்திருந்த கலந்துரையாடல்கள் தமிழ் தேசியக்கூட்டமைப்பினரின் வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியுள்ள சூழ்நிலையில் சற்று சுறுசுறுப்பானது போல் காணப்பட்டது. தெரிவுக்குழுவில் கூட்டமைப்பினர் இணைந்து கொள்வது குறித்த சர்ச்சையினால் மீண்டும் சிக்கல் நிலையை அது அடைந்துள்ளது.

இதுவரை காலமும் தமிழ்தேசியக்கூட்டமைப்பினருக்கும் அரசாங்கத்திற்குமிடையே நடைபெற்றுள்ள பலசுற்றுக் கலந்துரையாடல்களின் போதும் பல விடயங்கள் பேசப்பட்டன. கூட்டமைப்பு ஒரு தீர்வுத் திட்ட யோசனையை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இது குறித்து எந்தவொரு முடிவினையும் தெரிவிக்காத அரசாங்கம் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொள்வது குறித்து இப்போது அவசரம் காட்டுகிறது.

தன்னுடன் இதுவரை காலமும் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் தீர்வு ஒன்றை முன்வைக்காமல் இப்போது தெரிவுக்குழுவில் அங்கம் பெற உறுப்பினர்களைத் தருமாறு அரசாங்கம் கோருவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், தீர்வு ஒன்றை முன்வைத்தாலேயே தெரிவுக்குழுவில் பங்கேற்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் எனவும் கூட்டமைப்பு உறுதியாகத் தெரிவித்துள்ளது. கூட்டமைப்பு எடுத்துள்ள இந்த முடிவு சரியானது என்றே கூறலாம்.

இதே வேளை, சில தினங்களுக்கு முன்பு இடம் பெற்ற இருதரப்பிற்குமிடையிலான 16ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுதல் மற்றும், பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படுதல் ஆகிய கூட்டமைப்பினரின் யோசனைகளை அரசாங்கம் அடியோடு மறுதலித்துள்ளது. இவை மூன்றும் இனப்பிரச்சினைத் தீர்வில் அடிப்படையான அம்சங்களாகும். அத்துடன் இவை புதிதாகப் பேசப்படும் விடயங்களும் அல்ல. பல்வேறு ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகளின் போதும் ஏற்கனவே முன்வைக்கப்பட்டவையே.

போர் முடிவடைந்த பின்னரான காலகட்டத்தில் தமிழ்தேசியக்கூட்டமைப்பினருடன் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளின் போது அது ஒரு புதிய விடயமாகப் பார்க்கப்பட்டு மறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தொடர்ந்து நடைபெறப்போகும் பேச்சுக்கள் எவ்வாறு முன்னேற்றப் பாதையில் செல்லக்கூடும் என்பது இன்று தமிழ் மக்களிடம் தோன்றியுள்ள சந்தேகமாகும்.

அரசாங்கம் அமைத்துள்ள தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் பலர் கடும்போக்காளர்களாகக் காணப்படுகின்றனர். இதில் தமிழர் தரப்பினால் முன்மொழியப்படும் சாதாரண விடயங்களுக்குக் கூட அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கலாம். இந்நிலையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அமைக்கப்பட்ட தெரிவுக்குழு ஒரு விவாத மேடையாகவும் மாறக்கூடும். எனவே இப்போது கூட்டமைப்பினர் எடுத்திருக்கும் முடிவானது சரியானதாகும்.

இன்று இரண்டு முக்கிய விடயங்களுக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பு முகம் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஒன்று-தீர்வு விடயத்தில் உள்ளேயும் வெளியேயும் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள். மற்றது-தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்காகக் களத்திலிறங்க வேண்டியது. தற்போது தமிழ் மக்கள் எதிர்கொண்டுவரும் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று மீள்குடியேற்றமாகும். போர் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு இரண்டரை ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு இன்னும் பூரணப்படுத்தப்படவில்லை. முன்னர் கண்ணிவெடிகள் அகற்றப்படுகின்றமையை அரசாங்கம் காரணம் காட்டி வந்தது. இப்போது படைத்தளங்களாக சில பகுதிகள் ஆக்கிரமிக்கப்படுகின்ற அபாயம் தோன்றியுள்ளமை காணக் கூடியதாகவுள்ளது. அண்மையில் மாதகல் மேற்குப் பகுதியில் தங்கள் குடியிருப்புக்களில் மீள் குடியமர கடற்படையினர் தடைவிதித்தமைக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். இனி வரும் காலங்களில் இவ்வாறான ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் தமிழ் பிரதேசங்களில் மக்களால் முன்னெடுக்கப்படலாம். அவற்றிற்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட அம்மக்களோடு அவர்களும் களத்திலிறங்க வேண்டும். கூட்டமைப்பின் ஒரு பகுதியினர் தீர்வு குறித்த விடயங்களில் உறுதியாகவும், தீவிரமாகவும் செயற்படும் நிலையில், ஏனையோர் பாதிக்கப்பட்ட மக்களின் அன்றாடப் பிரச்சினைகளில் முகம் கொடுப்பதற்காக களமிறங்க வேண்டியது அவசியமானதாகும்.



# கல்வியில் அரசியல்

■ ஹரீஸ்

அரசறிவியலின் படி அரசிற்கும் (State) அரசாங்கத்திற்கும் (Government) இடையிலே நிறைய வேறுபாடுகள் உண்டு. இன்றைய நடைமுறை உலகில் இவை இரண்டிற்குமான வேறுபாடுகள் சாதாரண மக்களால் பெரும்பாலும் உணரப்படாமலேயே உள்ளன. ஆனால் தற்கால அரசியல் செயற்பாடுகளின்போது நீதித்துறை, சட்டத்துறை அரசியல் மற்றும் நிர்வாகத் துறை போன்ற துறைகள் மீது மேற்கொள்ளப்படும் தலையீடுகள் காரணமாக அரசு-அரசாங்கம் என்ற வேற்றுமையிலான வேறுபாடுகள் அருகிவருவதை பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசறிவியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். எல்லாத் துறைகளிலும் அரசியல்வாதிகளின் தலையீடுகள் அதிகரித்துச் செல்கின்றன.

இதில் கல்வித்துறையைப் பொறுத்தவரையில் அரசினதும் தனியார் துறையினரதும் செல்வாக்கு பிரதிநிதித்துவ வகையில் காலங்காலமாக இருந்து வருகின்றது. ஒரு நாட்டு அரசாங்கத்தின் முக்கிய பிரிவுகளாக விளங்கும் சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை என்பவற்றில் ஏற்படும் அறிவுமயமான வளர்ச்சியே அந்த நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழி கோலுகின்றது. இந்த மூன்று துறைகளிற்குமான அதிகாரிகளை அல்லது நிபுணர்களை வழங்கும் பிரதான மத்தியமாக கல்வித்துறை விளங்குகின்றது. இந்தக் கல்வித் துறையால் உருவாக்கப்படும் தலைவர்களே நாளைய அரசாங்கத்தையும் அரசினையும் நிர்வகிக்க வேண்டிய பொறுப்பிலிருப்பதால் எல்லா நாடுகளும் தமது நாட்டின் கல்வித்துறையை அபிவிருத்தி செய்யப் பெருமளவு நிதிகள் மூலமாக முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையிலும் இலங்கையின் கல்வித்துறையானது கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த அரசுகள் பல்வேறு பாராட்டத்தக்க செயற்பாடுகளை மேற்கொண்டன. குறிப்பாக 1945 ஆம் ஆண்டு அப்போதைய இலங்கையின் கல்வி அமைச்சராக இருந்த சி.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா அவர்களால் இலவசக் கல்வி நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

இதன்மூலம் இலங்கையின் கல்வித்துறை மேலும் மேலும் மெருகூட்டப்பட்டு புதிய திசை நோக்கி பயணிக்க ஆரம்பித்தது. வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பிள்ளைகளும் ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி என்பவற்றை பெறக் கூடிய சூழல் உருவாக்கப்பட்டது. பல்கலைக்கழகக்கல்வியையும் இலவசமாக பெறுவதற்குரிய ஏது நிலை உருவானது.

இதன்பின் 'மகாபொல' போன்ற புலமைப்பரிசில் திட்டங்கள் ஆட்சிக்கு வந்த அரசுகளால் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், இன்றோ தனியார் பல்கலைக்கழக உருவாக்கங்கள் மூலமாகவும், பல்கலைக்கழகங்களில் நிலவும் அரசியல் தலையீடுகள் காரணமாகவும் இலங்கையின் இலவசக்கல்வி ஆட்டங்காணத் தொடங்கியுள்ளது.

இலங்கையின் அறிவியலாளர் மட்டங்களில் இடம் பெறும் வாதப் பிரதிவாதங்களை வெளிப்படுத்தால் அது

இலங்கையின் தனியார் பல்கலைக்கழகங்களின் உருவாக்கம் பற்றியதாகவே அமைந்துள்ளது.

இன்றைய காலப்பகுதியில் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள படித்த இளைஞர்களுக்கான வேலை இல்லாப்பிரச்சினையையும் தனியார் பல்கலைக் கழக உருவாக்கம் அதிகமாக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக தனியார் பல்கலைக்கழகங்களின் உருவாக்கத்தின் மூலம் செல்வந்த குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் தனியார் பல்கலைக் கழகங்களில் பெருமளவு நிதியினை செலவு செய்து பட்டங்களை பெறும் ஏற்றநிலை உருவாகும் சூழ்நிலை ஏற்படும். இதனால் தனியார் பல்கலைக்கழகங்களின் பட்டங்கள் கூவிக் கூவி விற்பனையாகும் சூழ்நிலை ஏற்படும். இதனால் கல்வித்துறையும் பணத்தால் விலைபோகப்படும் சாத்தியக் கூறுகள் ஏற்படும் என்ற அச்சம் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களிடம் தவிர்க்க முடியாமல் எழுந்துள்ளது. இந்நிலையில் கல்வியில் ஏற்படும் தனியார் மயப்படுத்தல் இலங்கையின் இலவசக் கல்வித்துறையை மேலும் வலுவற்றதாக்கும் சூழ்நிலை தவிர்க்கமுடியாமல் எழும். இதே வேளை இன்று பல்கலைக்கழகங்களில் ஏற்பட்டுள்ள அரசியல் தலையீடுகளும் இலவசக் கல்வியை வலுவற்றதாக்கி விடும் நிலையை உருவாக்கியுள்ளது. அந்தவகையில் அண்மையில் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவித்த இலங்கையின் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க பல்கலைக் கழகங்களில் ஏற்படும் மாணவர்களின் மோதல்களை தடுக்க அங்கு பொலிஸ் சாவடி அமைக்கப்படும் என்ற வகையில் கருத்துத்தெரிவித்திருந்தார். பல்கலைக்கழகங்களில் பொலிஸ் சாவடி என்பது அறிவுமட்டத்தால் ஏற்றுக் கொள்ளக் கூடியதா என்பது கேள்விக்குரியதே!

எதிர்வரும் காலங்களில் பாடசாலை மாணவர்களிடையில் சிறு மோதலோ அல்லது குழப்ப நிலையோ ஏற்பட்டால் இலங்கையில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் பொலிஸ் சாவடி அமைக்கப்படுமோ என்ற கேள்வி மாணவர்கள் மத்தியில் தவிர்க்கமுடியாமல் எழுந்துள்ளது. இதன் மூலம் எதிர்காலத்தில் அரசியல் தலையீடு பல்கலைக்கழகங்களில் மேலும் கூர்ப்படையலாம். இதே வேளையில் அண்மையில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனம் கடந்த சில வருடங்களாக பல்கலைக்கழகங்களில் சுய நிர்வாகத்தை நிலை நிறுத்தி பாதுகாக்க வழி செய்யுமாறு எமது சம்மேளனம் அரசினை கோரியிருந்தது. பல்கலைக்கழகங்கள் மீதான சட்டவிரோத மற்றும் நியாயமற்ற தலையீடுகளுக்கு அரசு இடம் அளிக்கக்கூடாது எனவும் பல்கலைக் கழகங்களின் சுய நிர்வாகம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் எமது சம்மேளனம் அரசினைக் கோரி வருகின்றது. ஆனால் தனியார் பல்கலைக்கழகங்களை திறத்தல் மற்றும் பல்கலைக்கழக விதிமுறைகளில் இடைக்கால திருத்தங்களைச் செய்தல் போன்ற செயற்பாடுகள் செனட் சபையில் அனுமதியில்லாமல் செயற்படுத்தப்படுதல் போன்ற செயற்பாடுகள் கல்விமான்களையும் மாணவர்களையும் விரக்தியடையச் செய்துள்ளது. எனவே தற்காலிகமாக கடந்த ஜூலை மாதம் 21ஆம் திகதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எமது தொழிற்சங்க நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து ஆலோசித்து வருகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த சில மாதங்களுக்கு முன் பல்கலைக்கழகங்களில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது எனக்கோரி பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அடையாள வேலை நிறுத்தங்களை மேற்கொண்டிருந்தது. எனவே இலங்கையின் கல்வித்துறையை அபிவிருத்தி செய்யும் பாரிய பொறுப்பிலுள்ள அரசு கடந்த காலங்களைப்போல் இலவசக் கல்வியை வலுவூட்டும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அது மாத்திரமல்லாமல் எந்தவித தலையீடு மற்ற சுயாதீனமான பல்கலைக்கழகச் செயற்பாடுகளை அரசு ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இருக்கவே முடியாதவன் பறக்க ஆசைப்பட்ட கதையாக, தனியார் பல்கலைக்கழகங்களை அமைப்பதாக கூறும் அரசு நாட்டில் உள்ள அரச பல்கலைக் கழகங்களின் அபிவிருத்திக்கு வலுச்சேர்ப்பதோடு, பாடசாலைகள் கல்லூரிகளின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான நடவடிக்கைகளில் எல்லா துறைகளையும் விடக் கூடிய கவனம் எடுத்து நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும். இந்த பொறுப்புகளிலிருந்து அரசு தவறுமாக இருந்தால் இலங்கையின் இலவசக்கல்வி வலுவிழக்கும் சாத்தியக் கூறுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கல்வியே நமது சொந்தமாகும்

கொழும்பு பிரதேசத்தில் அநேகமான பெருந்தோட்ட இளைஞர் யுவதிகளும் சிறுவயதிலான சிறுவர்களும் வேலை செய்கின்றனர். பத்திரிகை விளம்பரங்களில் கூட அதிகமாக மலையக இளைஞர்களுக்கு முதலிடம் தரப்படும் என அழுத்த எழுத்துகளால் விளம்பரப்படுத்தப்படுகின்றது. மலையகத்தவர்கள் என்றால் அவர்களுக்கு மலிவான ஒரு விடயமாக மாறிவிட்டது. பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களையே ஹோட்டல்களிலும், பலசரக்கு கடைகளிலும் பலவாறாக பயன்படுத்திக் கொள்கின்றனர். குறைந்த சம்பளம், கடுமையான வேலையின் நடுவிலும் இவர்கள் தமது உழைப்பினை வழங்கி வருகின்றனர். இதனை விட்டு விலகினாலும் வேறு நல்ல தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொள்ளும் நிலையும் இவர்களுக்கு அமைவதில்லை.

ஏன் இவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகி இவ்வாறு உழைக்க வேண்டும் என்ற கேள்விக்கு விடை தேடினால் அவை குடும்பப் பிரச்சினைகளாகவும் சமூகம் சார்ந்த பிரச்சினைகளாகவும் காணப்படுகின்றன. இதில் மாணவர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பும் முக்கிய பங்கு வகிக்கின்றது. எவ்வாறான பிரச்சினைகளையும் பெற்றோரால் தீர்த்து விட முடியும். ஆனால் சில பெற்றோர்களின் அசமந்தப் போக்கினால் இவ்வாறான பிழைகள் நேர்கின்றன. ஆயினும் பெருமளவிலான பெற்றோர்கள் தாங்கள் பிள்ளைகள் கல்விகற்று முன்னேற அயராது உழைக்கின்றனர்.

இப்போதைய இளைஞர்கள் பெற்றோரின் எண்ணங்களுக்கு மதிப்பளிப்பதில்லை. தமது வழியே சரியான வழி என எண்ணுகின்றனர். சகாக்களில் ஒருவர் கல்வியை இடையில் நிறுத்தி வேலைக்குச் சென்றால் தாமும் அவர்களைப் போலவே வேலைக்கு செல்ல வேண்டும், இளமையை இனிதாக கழிக்க வேண்டும் எனத்தூண்டப்படுகின்றனர். இவர்கள் தமது எதிர்காலத்தைப் பற்றி நினைத்துப்பார்ப்பதில்லை. அவர்களது எதிர்காலத்தைப் பற்றி கூறுவதற்கு ஒரு நல்ல சமுதாயம் அருகிலிருந்தால் இவ்வாறான வழித்தவறல்கள் இடம் பெறுவதற்கு வாய்ப்பில்லை. இவர்களது ஆறாற்ற சிந்தனை முடிவுகளால் பல்வேறான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இவர்கள் மதுப்பாவனை, புகைத்தல், போதைவஸ்து போன்ற தீயபழக்கவழக்கங்களுக்கும் அடிமையாகின்றனர். இவர்களது எதிர்காலமே கேள்விக்குறியாகும் அபாய நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறான வழிகோலல்களை தவிர்ப்பதற்கு ஒரேயொரு வழி கல்வி மட்டுமேயாகும். மலையக சமுதாயம் கல்வி பெற்று முன்னேறிய ஒரு சமுதாயமாக மாறவேண்டும். எமது சமுதாயத்திலுள்ள படித்த மாணவர்களும் உறுதுணையாக இருக்கவேண்டும். கல்வியால் மட்டுமே இவ்வுலகில் மாற்றத்தைக் கொண்டு வர முடியும். கல்வியே எம்சொத்து என்ற எண்ணம் ஒவ்வொரு மாணவனின் உள்ளாக் கிளைகளிலும் ஊற்றெடுக்க வேண்டும்.

மாணவப் பத்திரிகையாளர்
ஜனனி பொன்னையா
பனியன் தோட்டம்
மல்கெலியா

# நண்பர்கள் கூடுவது பொழுது போக்குவதற்கு மட்டுமல்ல!



நுவரெலியாவின் பசுமையில் பங்கு கொள்ளும் இளைஞர் சமூகத்தினர் தமது சமூக சேவைகளையும் பல வழிகளில் செய்து வருகின்றனர். இவ்வாறாக நுவரெலியாவில் பிரபல பாடசாலை ஒன்றின் 2006 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்கள் ஒன்றிணைந்து சமூகசேவை நோக்கின் அடிப்படையில் 'கதிர்கள்' என்றதோர் சமூக சேவை அமைப்பை உருவாக்கியுள்ளனர். இவ்வமைப்பின் மூலமாக ஒரு சில வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு பல வேலைத்திட்டங்களும் முன் வைக்கப்பட்டுள்ளன.

கல்வித்துறையில் பங்களிப்பு செய்வது மட்டுமன்றி சமூக சேவையிலும் ஈடுபடுவது இதன் பிரதான நோக்கமாகும். இதுபற்றி அவ்வமைப்பின் தலைவரிடம் வினவிய போது வெறுமனே நண்பர்கள் ஒன்றிணைந்து மகிழ்ச்சியாகக் கொண்டாடிச் செல்வதை விட நண்பர்கள் ஒன்றிணைந்தால் புது முயற்சிகளை மேற்கொள்ளலாம். எனவே நண்பர்களால் எதுவும் முடியும் என்பதை நிரூபிப் பதற்காக சமூக சேவையின் அடிப்படையில் 'கதிர்கள்' என்ற அமைப்பு தோற்றம் பெற்றதாகக் கூறுகின்றார்.

மேலும் இந்த அமைப்பின் ஒவ்வொரு இளைஞனும் ஒவ்வொரு விதமான சமூக சேவைகளை முன்வைக்க இருக்கின்றனர். "எம்மை இந்தளவிற்கு வளர்த்து விட்ட சமூகத்திற்கு நாம் எதை எவ்வாறு எப்படி செய்வது என்று சிந்தித்து 'கதிர்கள்' மூலம் அது மேற்கொள்ளப்படுகின்றது. இது போன்ற சமூக நோக்குடன் இன்றைய இளைய சமுதாயம் இருப்பதையொட்டி மிகவும் மகிழ்ச்சியடையும் அதேவேளை 'கதிர்கள்' போன்ற அமைப்பு அனைத்து பாடசாலைகளிலும் ஏற்படுத்தப்பட்டு சேவை செய்யவேண்டும் எனக்கூறி கதிர்களை வாழ்த்துகின்றோம்.

மாணவப் பத்திரிகையாளர்
அ. நிதர்ஷிகா (அறிவுத்தேன்)
நுவரெலியா.


மலேசிய EVERSENDAI வியாபார நிறுவனத்துடன் இணைந்த



டோஹா கட்டார்

கிளைக்கு வெற்றிடம் 100

நல்ல வசீகரமான தோற்றமுடைய 19 -40 கிடையில்
தமிழ் பேசத்தெரிந்தவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

கை உதவியாளர்கள்
(ஆண்)

சம்பளம்
QR 600 + OT

- ஒப்பந்தக்காலம் 02 வருடம்
- உணவு, தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து இலவசம்.
- நாளொன்றுக்கு 08 மணித்தியால வேலை மற்றும் மேலதிகநேரம்
- ஒப்பந்த நிறைவில் திரும்பி வர விமான டிக்கட் இலவசம்.
- ஏனையவை கட்டார் தொழில் சட்டத்திற்கேற்ப


உங்கள் விண்ணப்பங்கள்
இப்போது
ஏற்றுக்கொள்ளப்படும்

HOTLINE
072 712 4415 / 072 312 4409

இக்ரா வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
இல: 534 1/1 - 1/2, மருதானை வீதி, மருதானை, கொழும்பு-10. (ஆனந்தாக்கல்லூரிக்கு முன்னால்)
தொலைபேசி : 0094 115 544 333 தொலை நகல் : 0094 115 544 337
License No. 2541
E-mail : info@ikralk.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அ.சூரியன்

இருட்டில் மினுமினுக்கும் அந்தக் கண்களைக் குறிவைத்து பிஸ்டல் துப்பாக்கியை இயக்க ஆயத்தமானான் சுதா. படுத்தவாக்கில் இடது கையில் ரோச் லைட்டை ஒன் பண்ணிய சம நேரத்தில் துப்பாக்கியால் சுடுவதுதான் அவனது தீர்மானமாக இருந்தது. ஆயினும் ரோச் லைட்டை ஒன் பண்ணி அவ் உருவத்தின் மீது ஒளியைப் பாய்ச்சிய மறு நொடி அவனது கண்களையே அவனால் நம்ப முடியாமலிருந்தது. உருவத்தை நோக்கி சுடுவதற்கு எத்தனித்த வலது கை துப்பாக்கியை இயக்காமல் மௌனம் காத்தது.

"எங்கே அந்த உருவம்?"

இருட்டில் பளபளத்த அந்தக் கண்களுக்குச் சொந்தமான அந்த உருவம் எங்கே? நாலா புறமும் ஒளியை விசிறினான். எங்குமே அது தென்படவேயில்லை. சரி வெளிச்சத்துக்குப் பயந்து அது மறைந்து விட்டதென நினைத்த அவன் ரோச்சை அணைத்து இருட்டில் துளாவினான். இப்ச்... அது தென்படவேயில்லை. அப்பொழுது

"இம்... ஐயோ... சுதா ..." என முனகல் கேட்கவும், சுதா மெதுவாக தனது மறைவிடத்திலிருந்து எழுந்து மிக அவதானமாக ரோச் லைற்றின் வெளிச்சத்தில் நடக்க ஆரம்பித்தான்.

இரு கண்கள் எங்கிருந்து பளபளத்ததோ அந்த இடத்தில் நிலத்தின் மீது ரோச் வெளிச்சத்தைச் செலுத்தி ஆராய்ந்தான். நிச்சயமாக ஏதோ ஒன்று அந்த இடத்தில் நின்றதற்கான தடயம் இருந்தது. அதற்கு ஏது வாகப் புற்கள் நசிபட்டிருந்தன. அது அப்பால் சென்றதற்கான எந்தத் தடயமும் தென்படவில்லை. இப்படியெனின் அந்த உருவம் பறந்திருக்க வேண்டும். இல்லையெனில் மரங்களின் மேல் பதுங்கியிருக்க வேண்டும். உடனடியாக



ரோச்சை தலைக்குமேல் உயர்த்தி பெரிய மரங்களின் உச்சிகளில் அதன் ஒளியைப் பாய்ச்சினான். ஆனாலும் அந்த உருவம் தெரியவேயில்லை. தனது தேடலைக் கைவிட்டு நிகிதாவின் குரல் வந்த இடத்தை நோக்கி மெதுவாக மெதுவாக நடக்கலானான்.

அருகில் வந்துவிட்டான். இப்பொழுது முனகும் நிகியின் குரல் அருகில் கேட்கத் தொடங்கியது. ஆனால் புல் தரையிலோ, அடர்ந்த மரங்களிற்குப் பின்னாலோ அவள் இப்பவே இல்லை. ஆனால் அவளது ஈனக்குரல் மட்டும்

"அம்மா ...சுதா ... காப்பாற்றுடா ...."

என்று வந்து கொண்டிருந்தது.

இதென்ன மர்மம்? எங்கே நிகிதா...?

குழம்பிப்போனான் சுதா. சடுதியாக தனது நவையை உசுப்பித் தனது குழப்பத்தைப் போக்கியவனாக மெதுவாக நிகிதாவை கூப்பிட ஆரம்பித்தான்.

"நிகி எங்க இருக்கிறாய்? பதில் சொல்லு ...?

"நான் உனக்கு எதிரில தான் இருக்கிறேன்"

"என்ன நிகி எனக்குத் தெரியேல்லையே!"

"சுதா முன்னாடி உள்ள பற்றையை விலக்கி ஒரு இருபதடி தூரம் நடந்துவா அவதானமாக வா ஒரு பெரிய பள்ளம் இருக்கு. அதற்குள்தான் நான் விழுந்து கிடக்கிறேன்"

நிகிதா கூறியது போன்று பற்றையை விலக்கி ஒரு இருபதடி தூரம் வர பள்ளம் ஒன்று தென்பட்டது. அதற்குள் நிகி உரசல் காயங்களுடன் கிடந்தாள்.

சுதாவைக் கண்ட நும் நிகிதாவிற்கு உயிர் மீளவும் வந்து விட்டது போன்று உணர்ந்தாள்.

"வா சுதா, எங்கே நீ என்னைக் காணாது போய் விடுவியோ என்று பயந்திட்டன்"

"என்ன நிகி என்னில நம்பிக்கை இல்லையா?"

"உன்னை விட்டிட்டு நான் எங்க போவன்?"

"சுதா இந்தக்காட்டில ஏதேதோ மர்மங்கள் எல்லாம் நடக்குது"

சுதா அவளை மேலும் பயப்பட அனுமதிக்காமல் தனது கிற்பையிலிருந்து கயிறொன்றை எடுத்து ஒரு நுனியை பள்ளத்திற்குள், நிகிதா விட்டும் மறு நுனியை மேலே நின்ற ஒரு மரத்தில் சுற்றிக்கட்டி விட்டுக் கேட்டான்.

"என்ன நிகி, என்ன மர்மங்கள் இங்கு நடக்குது...?"

"நான் மேலே வந்து சொல்லுறன் சுதா. முதலில் இந்தப் பள்ளத்திலிருந்து வெளிய தூக்கி விடு"

"நிகி இந்தக் கயிற்றை கெட்டியாகப் பிடித்து மேலே வா. இந்த என்னுடைய கையைப் பிடிச்சுக்கோ"

சுதா தரையில் படுத்திருந்து தனது இரு கைகளையும் அந்தப் பள்ளத்துக்குள் நீட்டினான். ஒருவாறு கயிற்றையும் பின்னர் அவனது கைகளையும் பிடித்து கரை சேர்ந்தாள் நிகிதா. உடனடியாகத் தனது கிற்பையைத் திறந்து மருந்துப்பையை எடுத்து நிகிதாவின் கை கால்களில் ஏற்பட்ட உரசல் காயங்களை கிளீன் பண்ணினான்.

"எல்லா மருந்தும் கையுமான ஆயுதமாகத் தான் வந்திருக்கிறாய் சுதா."

"பின்ன எப்படி நிகி..." இப்படியான இடத்திற்கு இது ரொம்பவே அவசியம்.

"அது சரி நிகி இங்க என்னென்ன மர்மங்கள் இருக்கு?"

"முதலில் நான் இந்தப் பள்ளத்திலை விழுந்ததே யாரோ கண்ணுக்குத் தெரியாத ஒரு உருவம் என் கால்களுக்குத் தடம் போட்டு விழுத்தியதால்தான்"

சுதா சிரித்து .... " இல்ல நிகி நீ ஓடி வந்த போது வேர் ஏதாவது கால்களைப் புதம் பார்த்திருக்கும்.

" இல்ல சுதா, நான் சொல்லிறது உண்மை. நீ கூட உருவமில்லாத பளிச்சிடும் கண்களைப் பார்த்திருப்பாயே...?

சுதா திடுக்கிட்டு நீயும் பார்த்தாயா நிகி...? என்றான்"

(ஆபத்து வரும்)

## பூமியைப் போன்று மற்றொரு கிரகம் நிபுணர்கள் உறுதி


வானவியல் குறித்து ஆய்வு நடத்த அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் சக்தி வாய்ந்த அதிநவீன கெப்லர் டெலஸ்கோப்பை பயன்படுத்தி வருகிறது. அதன் மூலம் ஆய்வு மேற்கொண்ட விஞ்ஞானிகள் சமீபத்தில் பூமி போன்று மற்றொரு கிரகம் வானத்தில் இருப்பதைக் கண்டு பிடித்தனர். அதற்கு கெப்லர் 22-பி என பெயரிட்டனர். அந்த கிரகம் பூமியில்



இருந்து 600 வெளிச்ச ஆண்டுகள் தொலைவில் 1 லட்சத்து 50 ஆயிரம் நட்சத்திரங்கள் மத்தியில் உள்ளது. பூமியை விட 2.4 மடங்கு பெரியது. இங்கு 22 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை நிலவுகிறது. அது பூமிக்கு மிக அருகில் உள்ளது. அந்த கிரகத்தில் பெரும்பாலான பகுதிகள் எப்படி இருக்கும் என கணிக்க முடியவில்லை. அவை பாறைகளாகவோ, வாயு அல்லது திரவ நிலையிலோ இருக்கலாம் என கருதப்படுகிறது. இந்த புதிய கெப்லர் 22-பி கிரகம் குறித்து சமீபத்தில் நடந்த வானவியல் விஞ்ஞானிகள் மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. அப்போது இந்த கிரகம் பூமியை போன்றதுதான் என உறுதி செய்து அறிவிக்கப்பட்டது. அங்கு உயிரினங்கள் வாழ முடியும் என்றும் கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

- நா. யோகேந்திரநாதன் -

# சுடலை காத்தல்

"யாராகு கன்னி நீ நான் ஆடாத இவ்வி ருள் தன்னில் வந்து...." வீதி விளக்குகள் கூட உறக்கம் கொண்டு விட்ட அந்தப் பிரதேசத்தில், எங்கும் படர்ந்து கிடந்த பேரிருளைக் கிழித்துக் கொண்டு வந்தது அந்தப் பாடல்.

ஏற்கனவே நெஞ்சுக்குள் குமைந்து கிடந்து, அவளைப் படபடவென அடிக்க வைத்தது பயவுணர்வு. இருளைக் கிழித்து வந்த அந்தப் பாடலுடன் அது மேலும் பன்மடங்காக, திடீரென அவள் சைக்கிளை நிறுத்தினாள்.

பின் கரியரில் அமர்ந்திருந்த அவளின் தம்பி யோவானும் குதித்து இறங்கினான். சைக்கிள் ஓடி வந்தவள் அவளாக இருந்த போதும் ஏனோ அவனுக்கு மூச்சு வாங்கியது.

"தம்பி...டேய்...இது அப்பாவின்ரை குரலல்லோ?" அவளது குரலில் ஒரு மெல்லிய நடுக்கம் இருந்த போதிலும், அதை சிரமப்பட்டு வெளிக்காட்டாமல் கதைத்தாள்.

யோவான் எதுவும் பேசவில்லை? அவள் நன்றாகப் பயந்துவிட்டான் போல் தோன்றியது. சில விநாடிகள் மௌனத்தின் பின் அவன் தயக்கத்துடன் சொன்னான் "இது அப்பாவின்ரை குரல் மாதிரித்தான் கிடக்குது... ஆனால் அப்பா ஒரு நாளும் பாடுறேல்லையோ?" அவனுக்கும் கூட அதே சந்தேகம் தான்! ஆனால் கேட்டுக்கொண்டிருக்கும் குரல் தந்தையுடையது போலவே அவளுக்குத் தோன்றியது. எனினும் அவர் ஏன் இங்கு வரவேண்டும், ஏன் இந்தப் பாடலைப்பாட வேண்டும் என்பன போன்ற கேள்விகளும் அவளுள் எழாமல் இல்லை.

அவள் தனது பயத்தை மறைத்துக் கொண்டு "தம்பி! போய்ப் பார்த்துக் கொண்டு வருவமடா" என்றாள். யோவான் தயங்கித் தயங்கி "எனக்குப் பயமாய்க் கிடக்குதக்கா" என்று சொல்லி விட்டு நிறுத்தினான். அவன் உமிழ் நீரை விழுங்கும் ஒலி அவளுக்கும் கேட்டது.

அவனின் பயம் இவளிடம் ஏற்கனவே இருந்த பயத்தை அதிகரித்த போதிலும் அப்பாவின் குரலைக் கேட்டும் அவரைப் பார்க்காமல் போக அவளின் மனம் ஒப்பவில்லை. அது மட்டுமின்றி தந்தையாரைப் பார்த்து விட்டால் அவர் துணையிருக்கும் போது பயம் ஓடிவிடும் எனவும் அவள் நம்பினாள்.

"என்ன பயம்? கையிலை டோச் லைற் இருக்குது தானே! வா போவம்" என்றாள் பற்றிமா?

அவனும் அரை குறை மனதுடன் சகோதரியின் கையைப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

டோச் லைட்டை நிலத்தை நோக்கி அடித்துக் கொண்டே நடக்க வேண்டியிருந்தது. கருகிய கல்லுத் துண்டுகளும், உடைந்த ஓடுகளும் கால்களை உடைக்கக் காத்துக் கிடப்பவை போல் எங்கும் சிதறுண்டு கிடந்தன.

இப்போ பாட்டு நின்று விட்டது. ஒரு விநாடி நடையை நிறுத்திய அவள் ஏதோ முடிவு செய்தவளாக ஏற்கனவே பாட்டுக் கேட்ட திசையை நோக்கி நடந்தாள். யோவான் எதுவும் பேசவில்லை என்பதை விட அவனால் பயத்தால் எதுவுமே பேச முடியவில்லை. எனினும் தமக்கையுடன் கூட நடந்து கொண்டிருந்தான்.

முதல் நாள் இரவு தொலைதூரத்தில் கேட்ட கூச்சலும், திடீரென வீதியில் ஏற்பட்ட பரபரப்பும் தியாகராஜனையும் அவரின் பிள்ளைகளையும் வீட்டிற்கு வெளியே வரவைத்து விட்டன. அவர்கள் முற்றத்தில் வந்து பார்த்த போது நகரின் மையப்பகுதி இருந்த திசையில் வானமண்டலத்தில் பெரிய வெளிச்சம் படர்ந்து கிடந்தது.

என்ன நடந்தது என்பதைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் வீதிக்கு வந்த தியாகராஜன் வீதியில் ஓடிச் சென்று கொண்டிருந்த ஒருவனை மறித்துக் கேட்ட போது அவன் "எங்கடை நூல் நிலையம் எரியுதாம்" என்று கூறி விட்டு மீண்டும் ஓட ஆரம்பித்தான்.

அந்த வார்த்தைகள் தியாகராஜனின் நெஞ்சை பெரும் இடியாகத் தாக்கின. சாதாரண எஸ்.எஸ்.சி வகுப்புடன் ஆசிரியரான அவர் ஒரு பட்டதாரியாகி, பின் முதுமாணிப் பட்டம் பெற்று ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளராக வளர்வதற்குத் தீனி போட்டது அந்த நூல் நிலையம் தான். அது மட்டுமின்றி எத்தனையோ அறிவாளிகளையும், ஆய்வாளர்களையும் பிரசவித்த பெருமைஅதற்கு உண்டு.

அவரால் அந்தச் செய்தியைத் தாங்கவே முடியவில்லை. பற்றிமா அதிர்ச்சியுடன் "என்னப்பா?" எனக் கேட்டாள். அவர் சொல்ல "நூல் நிலையம் எரியுதாம்.. மாநகரசபையிலை தீயணைக்கிற யந்திரம் இருக்குது தானே.. அணைச்சுப் போடுவாங்கள்".

அந்த வார்த்தைகளை அவர் தனது மகளுக்கு சொல்லிய போதும் தீயணைக்கும் படையினர் தீயை அணைத்து விடுவார்கள் என்ற நம்பிக்கை அவருள் ஊறுவதை அவர் உணர்ந்து கொண்டார்.

"பிள்ளையள் வீட்டைப் பூட்டி விட்டு கவனமாய் இருங்கோ நான் போய் என்னென்டு பார்த்துக் கொண்டு வாறன்" என்று விட்டு வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினார் தியாகராஜன்.

பற்றிமாவும் யோவானும் இரவு முழுவதும் அவரின் வருகைக்காக வீட்டு வாசலிலேயே குந்திக் கொண்டிருந்தனர். இருந்தவாறே தூங்கி வழிந்த யோவான் படியிலேயே படுத்து விட்டான்.

வீதியிலும் சந்தடி சிறிது சிறிதாகக் குறைவடையவே பற்றிமா தம்பியாரையும் எழுப்பிக் கொண்டு உள்ளே போய்ப்படுத்தாள். அவளுக்கு தூக்கம் பிடிவாதமாக மறுத்தது. ஏதேதோ எண்ணங்கள் தோன்றி மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தன.

பொழுது புலர்ந்து கொண்டிருந்த நேரத்தில் அவளையறியாமலே மெல்லக் கண்ணயர்ந்த போது வாசலில் ஏதோ சத்தம் கேட்கவே திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள்.

எழுந்து அவள் வெளியே வந்து பார்த்த போது விறாந்தைக் கதிரையில் தியாகராஜன் சோர்ந்து போய் அமர்ந்திருந்தார். பற்றிமாவிடம் உள்ளூர ஏதோ ஒரு விதமான பயம் தோன்றியது. "அப்பா.. என்னப்பா?"

அவர் மெல்ல நிமிர்ந்து அவளின் முகத்தைப் பார்த்தார். அவரின் கண்கள் சிவந்திருந்தன. முகம் திடீரெனப் பல வருடங்களால் முதிர்ச்சியடைந்து விட்ட ஒரு தோற்றத்தைக் காட்டியது. "ஒன்றுமில்லை" என்று ஒரு நீண்ட பெருமூச்சுடன் கூறி விட்டு மீண்டும் தலையைக் குனிந்து கொண்டார்.

அவள் மெல்லிய தயக்கத்துடன் "ஒன்றுமில்லை என்டால்...?" என இழுத்தாள்.

திடீரென அவரின் குரல் உயர்ந்தது. "ஒன்றுமில்லை... ஒன்றுமில்லை எல்லாமே போச்சு... நூல் நிலையம் போச்சு... நூல்கள் போச்சு, அரிய ஆவணங்கள் போச்சு, தொன்மைவாய்ந்த ஓலைச் சுவடிகள் கூடப் போச்சு!"

பின் மெல்ல அவரின் குரல் கீழிறங்கித் தளதளத்தது. "இதையெல்லாம் கேள்விப்பட்டவுடனே தாவீது அடிகளின் உயிரும் போச்சு?"

அவளால் எதையும் பேசவோ செய்யவோ முடியவில்லை. மெல்ல நிலத்தில் தந்தைக்கு அருகில் அமர்ந்து அவரின் மடியில் தலையைச் சாய்ந்து கொண்டாள்.

வழமையாக அப்படியான சமயங்களில் அவர் அவளின் தலையை அன்பாக வருடி விடுவார். இன்று ஏனோ அவரின் கைகள் செயலற்றுப் போய்க் கிடந்தன.

"அம்மா நான் ஒரு கொஞ்ச நேரம் றெஸ்ற் எடுத்துப் போட்டு அடிகளாரின்ரை இறுதிக் கிரியைகளுக்குப் போட்டு வர வேணும்" என்றவர் பதிலை எதிர்பாராமலே கட்டிலில் போய் படுத்துக்கொண்டார். ஆனால் விழிகள் மூடவில்லை. அவை கூரையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன.

அவளால் எதையுமே புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அவரின் ஒவ்வொரு நடத்தைகளும் வழமைக்கு மாறாகவே இருப்பதை அவள் உணர்ந்து கொண்டாள். நெஞ்சைக் குடைந்து கொண்டிருந்த பயத்தை வெளிக்காட்டாமல் அவள் காலை உணவு தயாரிக்கும் வேலைகளில் ஈடுபடத் தொடங்கினாள்.

சற்று நேரத்தில் படுக்கையை விட்டு எழுந்த தியாகராஜன் கிணற்றடிக்குப் போய் முகத்தைக் கழுவி விட்டு வந்தார். பற்றிமா தயாராக வைத்திருந்த தேனீரை அவரிடம் நீட்டினாள்.

அதை வாங்கிக் குடித்தவாறே "அம்மா.. நான் தாவீது அடிகளாரின்ரை மரணச் சடங்குக்குப் போட்டு வாறன்" என்றார் அவர். பற்றிமா "சாப்பிட்டுப் போங்கப்பா" எனக் கேட்டாள். "இல்லை பிறகு வந்து சாப்பிடுறன்" என்று விட்டு அவசரமாகவே புறப்பட்டு விட்டார் தியாகராஜன்.

அப்படிக் காலையில் புறப்பட்டவர் மாலை ஏழு மணியாகியும் வீடு திரும்பவில்லை. அவர்களின் தாய் இறந்த பின்பு என்றுமே அவர் பொழுது படுவதற்கு முன் வீடு திரும்பாமல் இருந்ததில்லை.

தாங்க முடியாத தவிப்புடன் காத்துக் காத்துப் பொறுக்க முடியாத நிலையில் அவள் தனது தந்தை பற்றி அயல் வீடுகளில் விசாரித்தாள். எவருமே அவரை எங்கும் கண்டதாகக் கூறவில்லை. இப்படியாக அவர்கள் தவித்துக் கொண்டிருந்த போது தான் அவளிடம் படிக்க ஒரு வந்து வெளிவாசலில் நின்று கூப்பிட்டான். பற்றிமா வெளியே எட்டிப் பார்த்த போது அவன் "அக்கா சேர் நூல் நிலையத்துக்கு முன்னால் நிற்கிறார். வரச் சொல்லிக் கேட்டன் நீ போ.. எனக்கு வரத் தெரியும் என்று போட்டு நிற்கிறார்" என்றான்.

அவளால் எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை. எனினும் அவன் அவளிடம் "வாறீரே போய் பார்த்துக் கொண்டு வருவம்" எனக் கேட்டான். "ஓ.. நில்லுங்கோ வீட்டை.. போய்ச் சொல்லிப் போட்டு வாறன்" என்று விட்டுப் போனவன் அரைமணி நேரமாகியும் வந்து சேரவில்லை.

பொறுமையிழந்த பற்றிமா யோவானையும் கூட்டிக் கொண்டு நூலகம் நோக்கிப் புறப்பட்டாள். இருட்டு அவர்களைப் பயமுறுத்திய போதிலும், தந்தையைப் பற்றிய தவிப்பு பெரிதும் வாட்டியது.

அவர்கள் கட்டுத்தடுமாறி நூலக முன்றலுக்கு வந்த போது "யாரது?" என்ற குரல் பூவரச மரத்தில் கீழ் எழுந்தது. அது அவர்களின் தந்தையின் குரல் தான் என்பதை அவர்கள் திட்டவட்டமாகப் புரிந்து கொண்டனர்.

"அப்பா அது நாங்கள் தான்! உங்களுடைய பிள்ளையள்" பற்றிமாவின் குரல் சற்றுப் பலமாகவே ஒலித்தது. அவர் மெல்ல அவர்களின் அருகில் வந்தார். பின் கனிவுடன், "ஏனம்மா இந்த நேரம் இஞ்சை வந்தனீங்கள்" எனக் கேட்டார்.

யோவான் மெல்ல அனுங்கினான். "உங்களை இவ்வளவு நேரமும் காணவில்லை" "பிள்ளையள் நான் இப்ப கடமையிலை இருக்கிறன். இப்ப வர முடியாது! நீங்கள் போங்கோ...?" என்றார் அவர். அவரின் குரலில் ஒரு விதமான உறுதி தொனித்தது.

"என்ன கடமையோ?" பற்றிமா குழப்பத்துடன் கேட்டாள். அவர் சொன்னார் "ஓம் மகள் இந்தப் புத்தகங்கள், ஆவணங்கள் எல்லாம் எரிக்கப்பட்டு அதுகளின்ர ஜீவன் போட்டுது. அவை செத்துப் போச்சுது. தாவீது அடிகள் ஆண்டவரிட்டை போய் வாதாடி இந்த உயிர்களை மீட்டு வரப் போட்டார். அப்ப திரும்ப இதெல்லாம் உயிர் பெறும். அது வரைக்கும் இந்தச் சுடலை மேட்டை பேயளும், பிணம் தின்னி நாய்களும் அழிக்காமல் பாதுகாக்க வேணும்"

அவருக்கு மனநிலை பிசகி விட்டதாக பற்றிமா பயந்தாள்! "என்னப்பா இது சாத்தியமே...?" "மகள் சத்தியவானின்ர உயிரை சாவித்திரி வாதாடிப் பெற்றாள். தேவபிரானைச் சிலுவையினில் அறைந்து கொண்டாங்கள். அவர் மூன்றாம் நாள் உயிர்த்தெழவில்லையோ" இருவரும் திகைத்துப் போய் நின்றனர்.

அவர் தொடங்கினார் "நல்லவையை தற்காலிகமாக அழிக்கலாம் ஆனால் அவை மீண்டும் உயிர்த்தெழும்"

இருட்டுக்குள் அவரின் முகம் அவர்களுக்குத் தெரியாத போதும் இதில் தொனித்த நம்பிக்கையும் உறுதியையும் அவர்களால் புரிந்து கொள்ள முடிந்தது.

அவர் இருவரையும் இரு கரங்களாலும் அணைத்தவாறு அவர் சொன்னார் "இப்ப நீங்கள் வீட்டை போங்கோ... நான் விடிய வாறன்!"

அவர்களும் விடியும் என்ற நம்பிக்கையுடன் வீடு நோக்கிப் புறப்பட்டனர். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முஸ்லிம்களின் 'அசுரா'

பல நூற்றாண்டுகளின் முன்பு ஈராக்கின் கர்பாலா யுத்தத்தின் போது கொல்லப்பட்ட முகம்மது நபியின் பேரனான இமாம் ஹுசெய்னை நினைவு கூரும் முகமாக இஸ்லாமிய மாதம் முஹர்ரமின் 10வது நாளாகிய 6.12.2011 அன்று புதுடெல்லியில் முஸ்லிம் ஆண்கள் மற்றும் சிறுவர்கள் தமது மார்புகளைத் தட்டிக் கொண்டு ரத்தம் வழிய ஊர்வலமாகச் செல்வதை இங்கு காண்கிறீர்கள். இம் மதச் சடங்கினை 'அசுரா' என்பர். ஷியா முஸ்லிம் ஆண்களும், பெண்களும் கறுப்புடை அணிந்து மார்பிலே அடித்தபடி அழுதவண்ணம் ஊர்வலத்தில் கலந்து கொள்வர். அத்துடன் அன்றைய தினம் உபவாசமிருந்து ஹுசெய்ன் நினைவாக தானங்களும் வழங்கப்படும்.








ஹோட்டல் துறையில் மேல்ப் படிப்பு இலவசம்

புறகிறஸ்சோ - இலவசம் - தொழில் மற்றும் துறைசார் நிபுணத்துவம்.

ஹோட்டல் முகாமைத்துவம், சமையல் மற்றும் சர்வர் வேலைகளுக்கான தொழில் பயிற்சிகள். படிப்புக் காலங்களுக்கு வேலையிடத்தில் விடுமுறை பெற்றுத் தரப்படும்.

நேரடியாக இணையத்தில் அல்லது தொலைபேசி மூலம் பதிவு செய்யலாம்.

**www.progresso-lehrgang.ch**

| **Hotel & Gastro *formation*** | Eichistrasse 20 | 6353 Weggis
| Telefon +41 (0)41 392 77 33 | Fax +41 (0)41 392 77 70
| progresso@hotelgastro.ch | www.progresso-lehrgang.ch



உலகின் முதலாவது பல மொழி தமிழ் அகராதி, தமிழ், ஆங்கிலம், டொச், பிரெஞ்ச், இத்தாலி, நெதர்லாந்த், டெனிஸ், சுவிஸ், சிங்களம் ஆகிய பத்து மொழிகளைக் கொண்ட அகராதி. உங்கள் கைபடக்கத் தொலைபேசியில் பதித்துக்கொள்ளலாம்.

மொழி படிப்பவர்கள், பாடசாலை மாணவர்கள், ஐரோப்பிய சுற்றுப் பயணம் செய்பவர்கள் அவசியம் வைத்திருக்க வேண்டிய ஒரு மென்பொருள்.

தொடர்புகளுக்கு சுரேந்திர மாஸ்டர்,

இலங்கைத் தொடர்புகளுக்கு 077 266 36 25,

**Tel. 0041 61 813 15 52**

**www.tamilkadai.ch**

உங்கள் für Handy

கைபேசியில்

10 மொழி அகராதி

Sprache Wörterbuch

ஏஜண்டுகளுக்கு நல்ல கமிசன்



# Sudar Oli

வார மலரை ஐரோப்பாவில்
தபால் செலவை மட்டும் செலுத்தி வாராந்தம்
இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்.
பிறந்தநாள் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள்
மற்றும் அனைத்து விளம்பரங்களும்

Sudaroli, Post fach 60,
4302 August, Switzer land,
Tel: 0041 61813 15 52

Mail: info@tamilkadai.ch




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# விசித்திரமான காதல் ஜோடி

அண்மையில் சீனாவில் இருந்து வெளியாகிய காதல் தம்பதியினரின் நம்பவே முடியாத வாழ்க்கை உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. சீன ஆண்மகன் ஒருவர் வயதான ஒரு பெண்ணுடன் காதல் கொண்டு அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக இருவரும் தனிமையாக வாழ்க்கையை நடத்தியுள்ளனர்.

19 வயதான லியூ குவோ ஜாங் எனும் வாலிபன் 29 வயதான விதவைத் தாயான சூ சாவோஜின் என்பவரைக் காதலித்தார். விதவைத் தாயான சூ சாவோஜினுக்கு ஏற்கனவே பிள்ளைகள் உள்ளனர். இதனால் இவர்களின் உறவு முறையினையும், வயது வித்தியாசத்தையும் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் எதிர்த்தார்கள். அவர்களைக் கேலி செய்து விமர்சித்தனர்.

அந்தக் காலத்தில் ஓர் இளம் வாலிபன் வயதான ஒரு பெண்ணைக் காதலிப்பது ஒழுக்கக் கேடானதாகவும் ஏற்றுக் கொள்ளப்படாத ஒன்றாகவும் இருந்தது. எனவே அவர்களது சமூகத்தவரின் வம்புப் பேச்சுக்கள் அவமரியாதைகளைத் தவிர்க்கும் பொருட்டு இருவரும் இரகசியமாக எவருக்கும் தெரியாமல் ஓடிச் சென்று சொங்குயிங் மாநகரத்தின் தென்புறமாகவுள்ள ஜியாங் ஜின் கிராமத்தில் ஓர் குகையில் வாழ்ந்தனர்.







ஆரம்பத்தில் குகையில் அவர்கள் வாழ்க்கை மிகவும் கடினமாய் அமைந்தது. அவர்களிடம் எதுவுமே இருக்கவில்லை. உணவு மின்சாரம் உட்பட எந்த வசதியுமே இருக்கவில்லை. மலைப்பகுதியில் கிடைத்த புற்கள், வேர்கள் என்பவற்றை உணவாக உட்கொண்டனர். குகையில் வெளிச்சத்திற்கு லியூ ஒரு மண்ணெண்ணெய் விளக்கை உருவாக்கினார்.

சூ தன் மீது கொண்ட காதலின் நிமித்தம் லியூ கஷ்டப்படுவதை உணர்ந்து அடிக்கடி "நீங்கள் கவலைப்படுகிறீர்களா?" எனக் கணவனைக் கேட்கும் போதெல்லாம் "எதற்கும் அஞ்சத் தேவையில்லை நாங்கள் துணிந்து செயற்பட்டால் சந்தோசமாக வாழலாம்" எனக் கூறுவாராம்.

அவர்கள் ஒரு மலைப்பகுதியின் பள்ளத்தாக்கில் உள்ள குகையிலேயே வாழ்ந்தனர். அதன் காரணமாக தனது மனைவி குகைக்கு மலையின் அடிவாரத்திலிருந்து கஷ்டமாகச் சிரமமின்றி இறங்குவதற்கு வசதியாக, அவர்கள் அங்கு வாழத் தொடங்கிய இரண்டாவது வருடத்திலிருந்து கையினால் பாறையில் படிகளைச் செதுக்கத் தொடங்கி, தொடர்ச்சியாக 50 வருடங்களாகச் செதுக்கி 6000 இற்கும் மேலான படிகளைச் செதுக்கினார்.

50 வருடங்கள் இவர்களது வாழ்க்கை கழிந்த நிலையில் கடந்த 2001ம் ஆண்டில் காடுகளை ஆராய்ச்சி செய்யும் ஒரு குழுவினர் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் இத்தம்பதியினரையும் அவர்கள் வாழும் குகையினையும் கண்டு ஆச்சரியமடைந்தனர்.

அவர்களது ஏழு பிள்ளைகளில் ஒருவரான சாங்சென் அவர்கள் "50 வருடங்களுக்கு மேலாக ஒதுக்குப் புறமாகவே வாழ்ந்தனர். அத்துடன் ஒரு நாளாவது தனித்து இருந்ததுமில்லை" எனக் கூறினார். "அதுமட்டுமன்றி அவர் தாயாரின் வசதிக்காக 6000 ற்கும் அதிகமான படிகளைச் செதுக்கினார் என்றும் தமது தாயார் அவற்றினைப் பயன்படுத்தவில்லை" எனவும் தெரிவித்தார்.

தம்பதிகள் கடந்தவாரம் வரையில் சந்தோசமாகவும் சமாதானமாகவும் வாழ்ந்தனர். 72 வயதான லியூ வழமைபோல் தனது தோட்ட வேலையால் திரும்பிவருகையில் திடீரென மயக்கமுற்றார். சூ கணவரைத் தனது மடியில் வைத்துக் கடவுளை மன்றாடுகையில் அவரது மடியிலேயே அவர் மரணமானார். மரணத்தின் பின்னர், மனைவியின் கையை இறுகப் பற்றியிருந்த அவரது கையை விடுவிப்பதற்குப் பெரிதும் சிரமப்பட வேண்டியிருந்தது.

"நான் இறக்கும் வரையில் என்னுடன் இருந்து என்னைக் கவனிப்பதாக வாக்குறுதியளித்தீர்களே ஆனால் இன்று நீங்கள் முதலில் என்னை விட்டுச் சென்றுவிட்டீர்களே நான் எவ்விதம் நீங்கள் இன்றி வாழ்வேன்" எனக் கண்ணீர் வழிந்தோடக் கணவரின் கறுப்புநிறச் சவப்பெட்டியினைத் தொட்டவாறே கதறினாள் சூ.

இவர்கள் வாழ்ந்த குகையையும் செதுக்கப்பட்ட படிகளையும் அழியவிடாது பேணிப்பாதுகாத்து அதனை ஓர் அருங்காட்சியகமாகப் பேணுவதற்கு சீன அரசாங்கம் தீர்மானித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## வறுமைக் கோடுகள்


வாழ்க்கைக் கரங்கள்
வறுமையிலேந்து போனாலும்
கற்றல் காழ்வுகள்
எங்களைக் கூறு போட்டது
வறுமையும்
வங்கமும்
இரு துருவமாகி
எங்களைக்
கோவைக் கொண்டது
உறவு...
அர்த்தங்களை மறந்து
இகலைக்காலம் பத்திக் கொண்டது
பிரிவு...
பேனைப்பாலம்
கட்டாங்கிக்கொண்டது
வறுமையின்
வருக்களை
உரிமை கோரும்
இளங்களாய்...
நாங்கள்

க.நாகேஸ்வரன் [illegible]
சண்ணைப்பாலம்.

## என்னால்முடியாது.



பெண்ணே!
இதயமே இல்லாத நீ
இலகுவாய் இடம்பிடித்து விட்டாய்
இன்று நீ என்னை
மறந்து விடு என்று
இதயம் இருந்தும் நானோ
மறுபடி [illegible]
மரண வாசல்
தொட்டு வருகிறேன்




## சொல்லுங்கள்

சாமிகள்
காயவிடப்படுகின்றன....
பக்தர்கள்- இதை
யாரிடம் முறையிட....?

பா. பெனிற்லஸ்
மீசாலை.

## நட்பு



வானத்துக்கு எவ்வாறு
முகில் சொந்தமோ?
பூக்களுக்கு எவ்வாறு
தேன் சொந்தமோ?
கண்ணுக்கு எவ்வாறு
இமை சொந்தமோ?
பறவைக்கு எவ்வாறு
இறகு சொந்தமோ? – அதுபோல்
எனக்கு உன் நட்பு சொந்தம்

கொற்றவூர்
விசிதமது

## மண் பிறந்த மாந்தருக்கா?



வந்து பிறந்த
உணவுப் போட்டவர்கள்
இணைத்த இரு
மக்களின் கைகளை
[illegible] ஒன்று கூடி விரி
நின்று தவித்தது
[illegible] முறையால் சாதாரணம்
தொடர்ந்த மக்கள்
[illegible]

[illegible]
[illegible]
தீர்வும் போதிகளும்
[illegible]
என்று எங்கோ போனது
[illegible]

[illegible]
[illegible]
பெயர் கேட்டாலும்
[illegible]
[illegible]
[illegible]

இந்த தருணமாக்கிவிட்ட
[illegible]
இருமுறை என்றதை
இல்லாமல் செய்வதாய் கூற
பல முறைகளாக்க
கொண் வாக்குறுதிகள்

இவை அத்தனையும்
மண்பிறந்த மாந்தருக்கா?

[illegible]

## எங்கேயடி போய் ஒளிச்ச மாரியம்மா...?



எங்க மூலம்:-
அம்மாவுடன் வாசலிலே
அழுதபடி நிற்கின்றேன்.
சும்மா நீ சிரிக்காதே
கோபத்தில் இருக்கின்றேன்.
'ஐயோ' என்று நானழைக்க
எங்கேயடி போய் ஒழிச்ச?
சாவுக்குள் நான் கிடக்க
கோயிலுக்குள் நீ கிடந்தாய்
[illegible]
நான்:
நாலுபுறம் நெருப்பெரிய
நானிருந்தேன் நடுவினிலே
ஓலமிட்டு நானழைக்க
நீவந்து காக்கலையே
மாரியம்மா:
காக்கத்தான் ஓடிவந்தேன்
காப்பாற்ற முடியவில்லை
போக்கறுந்த பூமியப்பா
திசையெல்லாம் தீயப்பா
நான்:
தீக்குள்ளே நான் நிற்க
திரும்பி நீ வந்தனையோ
நீ தூக்கி வளர்த்த மகன்
நிலை தன்னை மறந்தனையோ?
மாரியம்மா:
மறப்பாளா உன் ஆத்தா
மகனே நீ கொதிக்காதே
இறவாத வரமெனக்குத்
தந்தவனே மறக்காதே
நான்:
மறப்பேனா என் ஆத்தா
மறு ஜென்மம் தந்தவளே
விறகாகிக் கரிந்திருப்பேன்
என் ஆத்தா இல்லையென்றால்
மாரியம்மா:
தீக்குள்ளே நீ நின்றாய்
தீ மயிரும் தொடவில்லை.
நீ என்னை அழைத்ததனால்
சா நெருங்க விடவில்லை.
நான்:
மாரியம்மா உன்னை நான்
மனிதருள்ளும் பூசித்தேன்
யாருமின்றிச் சாவதற்குள்
உனை அடைய யோசித்தேன்
மாரியம்மா:
என் மகனே கலங்காதே
அதையெண்ணி வருந்தாதே
உன் வாழ்வில் அப்படியோர்
துயர் சூழவிடமாட்டேன்!

தேவன் சுரேஷ்.
மன்னார்.

## விடிவுக்காக



காய்ந்து போன கனவுகள்
சிதறிப்போன
இலட்சியங்கள்
பிணக்காட்டு கட்டாந்
தரையான
எங்கள் பூர்வீகங்கள்
விடியுமென எதிர்பார்த்த
பொழுதுகள்
மங்கிவிட்டன.
இனியும் இனியும்
விடிவுக்கான பிரசவங்கள்
சாணக்கியமாக நகரும்
எனக் காத்திருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிம்புக்கு ஜோடி ஆண்ட்ரியா

தேசிய விருது பெற்ற இயக்குனர் வெற்றிமாறன், அடுத்து சிம்பு வைத்து 'வடசென்னை' என்ற படத்தை இயக்குகிறார். இதற்கிடையில் சிம்புக்கு ஜோடியாக ஆண்ட்ரியா நடிக்கப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



## அஜித் வீட்டுக்கு ரசிகர்கள்!

மங்காத்தா 100வது நாள் விழாவை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன், நடிகர் அஜித்தின் வீட்டுக்கு படையெடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள் ரசிகர்கள். தன்னை அரசியலுக்கு அழைத்த ரசிகர்களை கடிந்து கொண்ட அஜித், ஒரு கட்டத்தில் ரசிகர் மன்றங்களையே கலைத்து விட்டார். இப்போது மங்காத்தா பட வெற்றியால் மீண்டும் ரசிகர்கள் தங்களது ஆவலை வெளிப்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள்.



காதல், லட்சியம் இரண்டிலும் மனசு சொல்கிற திசையில் செல்லும் ஒருவன் கரை சேர்ந்தானா என்று சொல்லும் படம் 'மயக்கம் என்ன'. வைல்ட் லைஃப் போட்டோகிராஃபியில் சாதிக்க வேண்டும் என்பது தனுஷின் லட்சியம். நடுவில் நண்பனின் தோழி ரிச்சாவோடு காதல் டைவர்ட் கெமிஸ்ட்ரி பற்றிக்கொண்டு திருமணத்தில் முடிகிறது. பிரபல போட்டோகிராஃபரான ரவிப்பிரகாஷ், தனுஷ் எடுத்த புகைப் படத்தை' தனது என்று சொல்லி, பெருமை மிகு விருதை வெல்கிறார். அந்த விரக்தியில் மன நலம் பாதித்து, தான்தோன்றித் தனமாகத் திரிகிறார் தனுஷ். அவரது குடும்ப வாழ்க்கையும் சாதனைக் கனவும் என்ன ஆகின்றன என்பது க்ளைமாக்ஸ்!




முதல் பாதி அக்மார்க் செல்வராகவன் அல்வா. ரிச்சாவை அவரது நண்பன் தனுஷுக்கு அறிமுகப்படுத்தும்போதே ஆஹா... ஆரம்பிச்சிட்டாங்கப்பா எனப் பரவச கருத்துக்கள் பறக்கின்றன. பாதிப் பைத்தியமாகத் திரியும் தனுஷ், நள்ளிரவில் ரிச்சாவை எழுப்பி போஸ் தரச்சொல்வதும் கார்த்திக் ஜாக்கிரதை என போர்டு அடிப்பதுமாக ஒரு கிரியேட்டரின் கறுப்புப் பக்கங்களைக் காட்டிய விதம்... புதிது. ஆனால், அதைக் காட்டிய விதம் ரொம்பவே நீ...ள...ம். படத்துக்குப் படம் மெருகேறுகிறார் தனுஷ். ஏதோ தப்பா இருக்கே என ரிச்சா விஷயத்தில் குழம்பித் திரிவது, சார், உங்க அசிஸ்டென்டா சேர்த்துக்கங்க சார் என வாய்ப்புக்காகக் குறுகி நிற்பது, கெட்ட மூட்ல இருக்கேன்... பேசாத என விரக்தியில் வெடிப்பது என எல்லாத் திசைகளிலும் சிக்ஸர் அடிக்கிறார். அத்



## இலியானா வேண்டாம்

சீனு வைட்லா இயக்கும் புதிய படத்தில் ஜூனியர் என்.டி.ஆர் நடிக்கிறார். இதில் ஹீரோயினாக, இலியானா விடலாம் கோட்கலாம் என்று இயக்குனர் கூறினார். கடுப்பான ஹீரோ, தயவு செய்து இலியானா வேண்டாம். வேறு யாரை வேண்டுமானாலும் ஹீரோயினாகப் போட்டுக்கொள்ளுங்கள்என்றாராம். அவர்களுக்குள் பிரச்னை ஏதும் இல்லை. இந்தப் படத்தில் கண்டிப்பாக இணைவார்கள் என்கிறது இலியானா தரப்பு.







## நடிப்புக்கு விலை

சமீபகாலமாக நான் படங்களில் நடிக்க அதிக சம்பளம் கேட்பதாகவும், பல திரைக்கதைகளை ஒதுக்கி விடுவதாகவும் கூறுகிறார்கள். அது உண்மைதான். ஆனால் இதெல்லாமே சம்பளத்துக்காகத்தான் என்று கூற முடியாது என்னுடைய கால்ஷீட் வேண்டுமென்றால் நான் கேட்கும் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று கூறியுள்ளார் நடிகை திவ்யா.



கமலஹாசன் ரசிகர்களுக்காக ஏற்கனவே மய்யம் என்ற பெயரில் பத்திரிகை நடத்தினார். ஆனால் அது திடீரென நிறுத்தப்பட்டது. தற்போது அதை வெப்சைட்டாக மாற்றியுள்ளார். ரசிகர்மன்ற நிகழ்ச்சிகள், தனது படங்கள் பற்றிய விவரங்கள், புகைப்படங்கள், இலக்கிய கட்டுரைகள் போன்றவற்றை இந்த இணைய தளத்தில் போட்டு வைக்க திட்டமிட்டுள்ளார். இதன் மூலம் ரசிகர்களுடன் நேரடியாக கலந்துரையாடவும் முடிவு செய்துள்ளார்.

## சம்பளம் முக்கியமில்லை!

எனக்கு மொழிபேதம் கிடையாது. தமிழ், இந்தி, தெலுங்கு என எல்லா மொழி களிலும் தொடர்ந்து நடிப்பேன். தமிழில் 'வேலாயுதம் படத்தில் நடித்து உள்ளேன். உருமியிலும் நடித்து இருக்கிறேன். நல்ல கதையம்சம் உள்ள படங்கள் என்றால் சம்பளத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் நடிப்பேன். செய்யும் தொழிலை முழு ஈடுபாட்டுடன் பயபக்தியோடு செய்தால் வெற்றி பெறலாம் என்றார் ஜெனிலியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மயக்கம் என்ன'. ஃபியில் சாதிக்க சியம். நடுவில் காதல் டைவர்ட் மணத்தில் முடி-

தனை பெரிய கண்களா லேயே அனைத்தையும் பேசிவிடுகிறார் ரிச்சா. தனது ரத்தத்தைத் துடைத் தபடியே இயலாமையும் ஆவேசமுமாக சைகைக ளால் தனுஷை அதட்டி அடக்கு மிடத்தில்... அட!

தனுஷின் நண்பனாக வரும் சுந்தர் பெர்ஃ பெக்ட் ஃபிட். நண்பனை மடியில் சாய்த்து 'பூவே பூச்சூடவா பாடுவதும் தனுஷ் - ரிச்சா காதல் விஷயம் தெரிந்து சரக்கடித்துப் பொங்குவதும் கல்யாணத்தில் ஈஈஈ என ஆசீர்வாதம் வழங்குவதுமாக ஈர்க்கிறார்! ஜி.வி.பிரகாஷின் இசையும் ராம்ஜியின் கேமராவும் தான் படத்தின் ரியல் ஹீரோக்கள். 'காதல்... என் காதல்..,' பிறை தேடும்..., 'நான் சொன்னதும்..., 'ஓட ஓட... எனப் பாடல்களிலும் பின்னணி இசையிலும் ஜி.வி.பி. அடுத்த கட்டத்தைத் தொட்டு விட்டார். ஒரு புகைப் படக் காரனின் வாழ்க்கை அத்தியாயங்களை நிழலும் வண்ணங்களுமாகக் காட்சிப் படுத்தி இருக்கிறது ராம்ஜியின் கேமரா! தனுஷும் ரிச்சாவும் மழை அடிக்கிற பஸ் ஸ்டாப்பில் கட்டிக் கொள்ளும் போது 'சுந்தர் காலிங்' என மொபைல் அலறுவதும் நண் பர்களைச் சமாதானப்படுத்த சுந்தரின் அப்பா இருவருக்கும் கிளாஸில் சரக்கை ஊற்றி ஊற்றி நீட்டுவதுமாக ஆங்காங்கே 'அபாயக் கட்டம் தாண்டி எகிறுகிறது யூத் பல்ஸ்.




ல்வதும் கார்த் டிப்பதுமாக ஒரு ளைக் காட்டிய காட்டிய விதம் ப் படம் மெரு இருக்கே என து, சார், உங்க சார் என வாய்ப் மூட்ல இருக் வெடிப்பது என டிக்கிறார். அத்

இந்த ஆள்மாறாட்டக் காதல் கோக்குமாக்கை விட மாட்டீங்களா செல்வா?

ஆங்காங்கே அசரடித்தாலும் வழக்கமான காதல் ட்ரீட்மென்ட்டும் செம நீளமான திணற வைக்கும் திரைக்கதையும் 'மயக்கம் என்ன செல்வா'? எனக் கேட்கவைக்கின்றன!



## உருகும் கார்த்தி!!



தமிழ் ரசிகர்களை இழிவு படுத்தி பேசியதாக நடிகர் கார்த்தி மீது சர்ச்சை கிளம் பியுள்ளது. ஆனால் நான் அப்படி பேசவில்லை என் றும், தமிழ் ரசிகர்கள் என் பெற்றோர் போன்றவர்கள் என்றும் உணர்ச்சி பொங்க கூறியுள்ளார் கார்த்தி. ஹைதராபாத்தில் நடந்த விழாவில், ஆந்திராவில் எனது படங்களை பார்த்து வரவேற்பு கொடுப்பதற் காக தெலுங்கு ரசிகர்களுக்கு நன்றி சொன்னேன். தெலுங்கில் பேசியதால் தவறாகப் புரிந்து கொள்ளப் பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

## சிலு சிலுன்னு ஒரு காதல்

சிலு சிலுன்னு ஒரு காதல் படத்தின் மூலம் மீண்டும் விமல், நாயகி ஓவியா இணைந்து நடிக்கின்றனர். விமல் உடன் படங்களில் நடிப்பது எனக்கு வேடிக்கையான அனுபவத்தை தந்துள் ளது. நேரம் கிடைக்கும் போதெல்லாம் இருவரும் நட் பாகப் பேசி மகிழ்வதுண்டு என்று ஓவியா கூறியுள்ளார்.



## ரஜனிக்கு ஜோடி அனுஷ்கா?

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் புதுபடம் 'கோச்சடையான்'. 3டி தொழில்நுட்பத் தில் உருவாகும் இப்படத்தை அவரது மகள் சவுந்தர்யா இயக்குகிறார். இதனைய டுத்து படத்தின் ஹீரோயின் பற்றி புதுத் தகவல் வந்துள்ளது. சூப்பர் ஸ்டாருக்கு ஜோடியாக அனுஷ்கா நடிக்கலாம் என கோலிவுட் பக்கம் பேசப்பட்டு வருகிறது.



## அஞ்சலி கோபம்

எங்கேயும் எப்போதும் படத்தில் ஜோடியாக நடித்த ஜெய்க்கும் அஞ்சலிக்கும் காதல் என்று வதந்தி பரவியது. இல்லவே இல்லை என்று அஞ்சலி மறுத்தார். ஹீரோயின்களுக்குள் சண்டை மூட்டும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளனர். விக்ரம் நடிக்கும் கரிகாலன் படத்தில் 3 ஹீரோயின்கள் நடிக்கிறார்கள். இதில் முதலிடம் யாருக்கு என்கிறார்கள். முதல், இரண்டாவது என்று ஏன் பிரிக்கிறார்களோ தெரியவில்லை. 3 ஹீரோயின்களுக்கு ம் சமமான ரோல் என்றுதான் சொல்லி இருக்கிறார்கள்.



## மீண்டும் பிரியங்கா சோப்ரா!

பாலிவுட் முன்னணி ஹீரோயின்களில் பிரியங்கா சோப்ராவும் ஒருவர். பாலிவுட்டில் அசத்தி வரும் பிரியங்கா முதலில் சினிமாவிற்கு அறிமுகமானது தமிழில் தான். ண்டும் தமிழ் படத்தில் ஆசையாக இருப்பதாக கருத்து தெரிவித்துள்ளார். மேலும், சரியான கதை தமிழில் அமைந்தால் நான் மீண்டும் தமிழில் நடிப்பேன் என்று அவர் கூறினார்.



## காந்தம் திரைப்படம்

நியூமூன் ஸ்டுடியோஸ் சார்பில் சஞ்சய் கணேஷ் எனும் அமெரிக்க வாழ் இந்தியர் தயாரித்திருக் கும் திரைப்படம் காந்தம். கொஞ்சம் வெயில் கொஞ்சம் மழை, காதலுக்கு மரணமில்லை படங் களின் நாயகர் தேஜ், இப்படத்திற்கு கதை, திரைக் கதை, வசனம் எழுதி இருப்பதுடன், கதாநாயகரா கவும் நடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளையராஜாதான் எனக்கு இஷ்டம்

**- அனன்யா**



**தமிழுக்கு ஏன் அடிக்கடி லீவு விடுறீங்க?**

நாடோடிகள் முடிந்த பிறகு கொஞ்சம் இடைவெளி விழுந்தது உண்மைதான். நாடோடிகள் மாதிரி வேற கதை சொன்னால் எப்படி நடிக்கிறது? அதனால் நல்ல கதைக்காக காத்திருந்தேன். அப்போதுதான் சீடன் வாய்ப்பு வந்தது. மலையாளத்தில் நந்தனம் என்ற பெயரில் வெளியாகி விருதுகள் குவித்த படம். அந்த கேரக்டருக்காகவே நடித்தேன்.

**ஆனா இந்தப் படங்களில் கிடைக்காத பெயரை எங்கேயும் எப்போதும் தந்திடுச்சி இல்லையா?**

அதுவொரு அருமையான படம். அந்தப் படத்துக்குப் பிறகு நிறைய வாய்ப்புகள் வந்தது. தமிழில் மட்டும் இரண்டு படங்களில் இணைந்துள்ளேன். ஒரு படத்தில் அங்காடித் தெரு மகேஷ் நடிக்கிறார். இன்னொரு படம் பிரியதர்ஷனின் அசிஸ்டெண்ட் அஜித் மேனன் இயக்கும் படம்.

**கன்னடத்திலேயும் நடிக்கிறீங்க போலிருக்கிறதே?**

நல்ல கதையும் கேரக்டரும் இருந்தால் நான் மொழி, ஹீரோ பார்க்க மாட்டேன். கன்னடத்தில் நான் இணைந்திருக்கிறது நல்ல கதை. எனக்கு அருமையான பாத்திரம். ஹீரோவும், இயக்குனரும் புதுமுகங்கள்.

**சம்பத்தில் விஜய்யை சந்தித்தீர்களே. என்ன பேசினீர்கள்?**

ஒரு விழாவில் சந்தித்தேன். விஜய் எனக்கு மிகவும் பிடிக்கும். அவரைப் பார்த்ததும் உற்சாகமாகிவிட்டேன். என்னை அறிமுகப்படுத்திவிட்டு, நான் உங்க ரசிகை என்று சொன்னேன். அவர் ஒரே வார்த்தையில் தேங்க்ஸ் என்று சொல்லி முடித்துவிட்டார். ஏமாற்றமாக இருந்தது. இப்போது அவர்களை ஒரு படம் நடிக்க பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது.

**மோகன்லாலிடம் நீங்க திட்டு வாங்கியது கேரளாவில் பரபரப்பா பேசப்பட்டதே?**

ஆமா. ஒரு படத்தில் மிகப்பெரிய பள்ளத்தில் தொங்கிக்கிட்டிருக்கிற என்னை மோகன்லால் காப்பாத்துறது போல் காட்சி. நானே கொன்னுடுறேன் என்று சொன்னதுக்கு மோகன்லால் கடுமையா சத்தம் போட்டார். ஆனா ஒரு நாள்தான் அடம் பிடிச்ச அந்த கடினமான காட்சியில் நடிச்சு மலையாள விஜய சாந்தினு அவர்கிட்டயே பாராட்டு வாங்கினேன்.

**எங்கேயும் எப்போதும் படத்தில் உங்களுடன் நடித்த அஞ்சலியுடன் மீண்டும் ஒரு படத்தில் நடிக்கிறீர்களாமே?**

ஆமா. அது மலையாளப் படம். திலீப் ஹீரோவாக நடிக்கிறார். இன்னும் படப்பிடிப்பு தொடங்கலை.

**பெரிய கதாநாயகர்களுடன் நடிக்கமுடியவில்லை என்ற வருத்தம் இருக்கிறதா?**

நான் முன்பு சொன்னது போல பெரிய ஹீரோ என்று எல்லாம் நான் பார்க்கிறதில்லை. கதையும், பாத்திரமும் நல்லா இருக்கணும். நாடோடிகளில் பெரிய ஹீரோவா நடித்தார்? படம் நல்ல பெயரை வாங்கியதே. மோகன்லால் கூட இரண்டு படங்களில் தொடர்ந்து நடித்தேன். அவர் பெரிய நடிகர்தானே.

**உங்க ஹொபி?**

பாட்டு கேட்கிறது. அதுவும் இளையராஜா பாட்டுன்னா அப்படியே உருகிடுவேன். இசையில் அவர்தான் என் இஷ்டம். அவர் பாட்டு கேட்டுதான் தூங்குவேன்.



# ராஜபாட்டை

தெய்வத்திருமகள் படத்திற்கு பிறகு விக்ரம் நடித்து வரும் படம் ராஜபாட்டை. வெண்ணிலா கபடிக்குழு, நான் மகான் அல்ல, அழகர்சாமியின் குதிரை போன்ற படங்களை இயக்கிய டைரக்டர் சுசீந்திரன் இப்படத்தை இயக்குகிறார். தில், தூள், சாமி படத்திற்கு பிறகு விக்ரம் நடிக்கும் முழு கமர்ஷியல் படம் இது. படத்தில் விக்ரமிற்கு ஜோடியாக தெலுங்கு நடிகை தீக்ஷா சேத் தமிழில் அறிமுகமாகிறார். டைரக்டர் கே.விஸ்வநாத் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இவர்களுடன் சிறுத்தை



புகழ் அவினாஷ், நான் மகான் அல்ல வில்லன் அருள் தாஸ், பிரதீப் ரவாத், தம்பி ராமையா, மயில்சாமி உள்ளிட்டோர் நடித்துள்ளனர். நிலமோசடி தொடர்பாகவும், அவற்றுக்கு பின்னே இருக்கும் மோசடி கும்பல் பற்றிய கதைதான் ராஜபாட்டை. படத்தில் விக்ரம் வில்லனிடம் இருக்கும் அடியாளாக ஜிம்போயாக நடிக்கிறார். முழு கமர்ஷியல் படமாக உருவாகி வரும் இப்படத்தை பி.வி.பி.சினிமா புரொடக்ஷன் சார்பில் பிரசாத் வி.பொட்லூரி தயாரிக்கிறார். இவர் தயாரிக்கும் முதல் படம் இது. யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். மதி ஒளிப்பதிவு செய்கிறார்.

சென்னை, பாண்டிச்சேரி, ஹைதராபாத், திருவண்ணாமலை உள்ளிட்ட பகுதிகளிலும், பாடல் காட்சிகள் ஜப்பான் போன்ற வெளிநாடுகளிலும் படமாக்கியுள்ளனர். படத்தின் 75 சதவீத படப்பிடிப்பு நடந்து முடிந்துள்ளது. மீதி படப்பிடிப்பு வேகமாகவும், விறுவிறுப்பாகவும் நடந்து வருகிறது. தீபாவளி வெளிக்கு வெளிவருகிறது. முழு கொமர்ஷியல் படமாக ராஜபாட்டை இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வயர்லெஸ் பிரேக்

பொதுவாக கேபிள்கள் மூலமே மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களுக்கான பிரேக் வடிவமைக்கப்பட்டிருக்கும். ஆனால் தற்போது வயர்லெஸ் மூலமாக பிரேக் பிடிக்கக் கூடிய வகையிலான புதிய சைக்கிளை வடிவமைத்துள்ளனர் ஜேர்மனியின் சார்லண்ட் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள். இதற்காக கணனியை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட சோதனையில் வெற்றி கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். மிகவும் விரைவில் இவ்வாறு வயர்லெஸ் மூலமாக பிரேக் பிடிக்க கூடிய சைக்கிள்களை சந்தையில் அறிமுகப்படுத்தவுள்ளதாக தெரிவிக்கின்றார்கள். இது ஒரு ஆச்சரியப்பட வைக்கும் கண்டுபிடிப்பு எனவும் விரைவில் அனைவரும் வயர்லெஸ் பிரேக்குடன் கூடிய சைக்கிள் பாவிக்க முடியும் என்றும் பல்கலைக்கழக பேராசிரியரான ஹோல்கர் என்பவர் தெரிவித்துள்ளார்.

# மரத்தில் கட்டப்பட்டுள்ள அழகிய அதிசய வீடுகள்



வீடு என்பது பாதுகாப்பாக மனிதன் வாழ மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். ஆனால் இன்று அது நவநாகரிகத்திற்கு ஏற்றாற் போல் பல்வேறு வசதிகளுடனும் வித்தியாசமான கலையம்சத்திலும் அவரவர் பொருளாதார வசதிக்கேற்ப அமைக்கப்பட்டு வருகின்றது. இங்குள்ள படங்களைப் பாருங்கள் இவை யாவும் எளிமையாகவும் அழகாகவும் மரங்களின் மீது அமைக்கப்பட்டுள்ள வீடுகளை பிரதிபலிக்கின்றன.


# 15 குட்டிகளைப் ஈன்ற அதிசய நாய்



ஒன்று இரண்டல்ல மொத்தம் 15 குட்டிகளைப் போட்டிருக்கிறது இந்த மூன்று வயதான நாய். இது ஒரு Irish Setter வகை நாய். சிறு சிறு இடைவெளி விட்டு தொடர்ச்சியாக 15 குட்டிகளை ஈன்றிருக்கிறது இந்த நாய். அதில் 10 பெண் நாய்க் குட்டிகளும், 5 ஆண் நாய்க் குட்டிகளும் இருந்தன. நான்கு வாரங்கள் கர்ப்பமாக இருந்த போது ஸ்கான் பரிசோதித்துப் பார்த்ததில் எட்டு அல்லது ஒன்பது குட்டிகள் தான் இருப்பதாக நினைத்தோம். ஆனால் 15 குட்டிகள் போட்டது ஆச்சரியமாக இருப்பதாக அதன் உரிமையாளர் தெரிவித்தார். 15 குட்டிகளுக்கும் ஊட்டுவதற்கு நாயிடம் பால் பற்றாக்குறை காரணமாக புட்டிப் பாலும் வழங்கப்படுகின்றது.

# ஒட்டகத்தின் விலை 37 கோடி

குவைத்தில் பிடேர் எனும் ஒட்டகம் 37 கோடிக்கு விற்கப்பட்டமை அனைவருக்கும் ஆச்சரியத்தை அளித்ததோடு கின்னஸ் சாதனையாகவும் இடம் பெற்றுள்ளது. இத்தகவலை குவைத்திலிருந்து வெளிவரும் அல்-ஷாஹித் எனும் நாளிதழ் தெரிவித்துள்ளது. இவ்வளவு விலைக்கு விற்கப்படுவதற்கான காரணத்தை ஒட்டகத்தின் உரிமையாளர் கூறும் போது அந்த ஒட்டகம் தனித்துவமானதும் எல்லையற்ற அழகும் உடையதாகும் என்று கூறினார். மேலும் இவ்வொட்டகம் முஸ்லிம்களின் இறைதூதுவரான முஹம்மதும் அவர் தோழர்களும் பயன்படுத்திய ஒட்டகங்களின் வம்சாவழியில் வந்தது என்றும் கூறினார். மேலும் இந்த ஒட்டகத்தின் கொள்வனவு மதிப்பில் 37 கோடியை பணமாகவே பெற்றுள்ளார். நவீன கார்கள் என்ன ஒரு சிறு தொகை ஜெட்டையே வாங்கக் கூடிய விலையில் ஒரு ஒட்டகம் விற்பனையானது ஆச்சரியமாகவே கருதப்படுகிறது.



# மிகச்சிறிய விமான நிலையம்!



ஜேர்மனியின் ஹம்பர்க் நகரில் அமைந்துள்ள மினிச்சர் வொன்டர்லான்ட் விமான நிலையமே மிகச்சிறிய மாதிரி விமான நிலையமாகும். இதன் பரப்பளவு வெறும் 150 சதுர மீற்றர்களாகும். இங்கு நாள் ஒன்றிற்கு 40 வகையான விமானங்கள் 360 தடவைகள் பறப்புக்கு உட்படுத்தப்படுகின்றன. அத்துடன் இவ் விமான நிலையத்தின் நாள் வருமானம் 3.5 மில்லியனாகவும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்டுகொள்ளப்படாத சுரவணையடியூற்று

■ மட்டக்களப்பிலிருந்து - சக்தி

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக கிராமங்கள் நகரமயமாக்கப்பட்டு வருகின்றன. கிராமங்கள் துரிதமாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன என இலங்கையில் அரசியல்வாதிகளால் பேசப்பட்டு வருகின்ற நிலையில் இன்று வரை அடிப்படையான வசதிகள் கூட இல்லாத நிலையில் பல கிராமங்கள் உள்ளன. குறிப்பாக தமிழ் பிரதேசங்களிலேயே இவ்வாறான கிராமங்கள் பலவுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அவ்வாறான ஒரு கிராமம் பற்றியே நாம் இக்கட்டுரையில் பார்ப்போம்.

மட்டு மாவட்டத்தில் தெற்கே சுமார் 35 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள போரதீவுப்பற்று பிரிவுக்கு உட்பட்ட கிராமமே சுரவணையடியூற்றுக் கிராமம் ஆகும். இங்கு 161 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 598 பேர் செறிந்து வாழ்ந்து வருகின்றனர். இங்கு அம்மக்களின் பல்வேறுபட்ட அடிப்படைப் பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்படாமலும் கண்டுகொள்ளப்படாமலும் உள்ளதாக அக்கிராமத்து மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

மழைகாலத்தில் மட்டுமே இங்கு தண்ணீர் பஞ்சம் இல்லாமலிருக்கும். கோடைகாலத்தில் பெண்களின் இடுப்பில் ஒரு குடமும் தலையில் ஒரு குடமுமாக நீருக்காக அலையும் காட்சிகளைக் காணமுடியும். இந்த குடிநீர்ப்பிரச்சினையை நிவர்த்தி செய்து தருமாறு பலமுறையும் கோரிக்கை விடப்பட்டது. இந்நிலையில் அரசசார்பற்ற அமைப்பு ஒன்று நீர்வழங்குவதற்காக நீர்த்தாங்கி ஒன்றை அமைத்து கொடுத்துள்ளது. இது பற்றிக் கூறும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த யுவதி பிறேமா கூறுகையில் "எங்களுடைய கிராமத்தின் நடுவில் நீர்த்தாங்கி ஒன்று அமைத்துள்ளார்கள். ஆனால் அதிலிருந்து 10 நாள்கள் 15 நாள்களுக்கு ஒரு முறைதான் நீர் கிடைக்கின்றது. எவ்வளவோ நிதியினைச் செலவு செய்து இந்த நீர்த்தாங்கியை அமைத்தும் எமக்கு உரிய முறையில் பயன்படுத்த முடியாதுள்ளது. இதற்குரிய காரணமும் என்ன என்றுகூட கண்டறியாமல் தவிக்கின்றோம்" என்றார்.

விவசாயம், மேட்டுநிலப் பயிர்ச்செய்கை, கூலி வேலை, கால்நடைவளர்ப்பு போன்ற தொழில்களை மேற்கொண்டு வரும் மக்களைக்கொண்ட இந்தக் கிராமத்தின் நிலைபற்றி கருத்துத் தெரிவித்த சுமுகுந்தன் "எமது கிராமத்தில் பூரணப்படுத்தப்படாத நிலையில் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயம் ஒன்று உள்ளது. சீரான வீதிகள் இல்லாமல் மக்கள் சிரமப்படுகின்றனர். வீதிகள் யாவும் பழுதடைந்து போய் பாவிக்க முடியாத நிலையில் உள்ளன. இவைகளை நேரில் பார்வையிட்டுச் செல்கின்றார்கள் பலர் கண்டுகொள்ளாமல் உள்ளார்கள். ஏனைய கிராமங்களைப் போல் எமது கிராமமும் மிளிரவேண்டும் என்றுதான் நினைக்கின்றோம். ஆனால் அது கைகூடுதில்லை மற்றவர்களைப் போல் எங்களையும் அரசாங்கம் கவனத்தில் எடுத்தால் விரைவில் எங்கள் கிராமமும் வளர்ச்சி அடையும்" என்றார் ஒருவித சோக உணர்வுடன் கூறினார்.

சுரவணையடியூற்றுக் கிராமத்தில் படித்துவிட்டு தொழிலுக்காக காத்திருக்கும் இளைஞர் யுவதிகள் பலர் உள்ளனர்.

ஜெயந்தா என்ற யுவதி இதுகுறித்துக் கூறுகையில் "எங்களது கிராமத்தில் 99 வீதமான பெண்கள் தொழில் இல்லாமல் உள்ளார்கள். இதனைவிட க.பொ.த. சாதாரணதரம், உயர்தரம் கற்றவர்களும் உள்ளார்கள். இவர்களுக்குரிய எந்தவித முன்னேற்றகரமான பயிற்சிகளோ தொழில் வாய்ப்புக்களோ அற்ற நிலையிலேயே அவர்கள் உள்ளனர். தையல், கைப்பணி வேலைகள், தொழில்நுட்பப் பயிற்சிகள், இலத்திரனியல் பயிற்சிகள் போன்றவற்றை மேற்கொண்டு எம்போன்ற இளைஞர் யுவதிகளை வளர்த்துவிட்டால் நாங்கள் சுயதொழில்களில் ஈடுபடுவதோடு, எதிர்காலத்தில் எமது கிராமத்தின் வளர்ந்து வரும் தலைமுறைக்கு அவற்றைப் பயிற்றுவிக்கவும் கூடியதாக இருக்கும். எமது நிலை குறித்து பாராமுகமாக இருப்பது கவலையளிக்கின்றது" எனக் கூறினார். மழைகாலத்தில் வேளாண்மைச் செய்கையோடு சேர்ந்து மரவள்ளி, சோளம், பயற்றை போன்ற தானியப் பயிர்களையும் சில அரியவகை மரங்களையும் (செம்பமரங்கள், வருக்கன் ) கொண்டு அமைந்த கிராமமான சுரவணையடியூற்றுக் கிராமத்தில் கால்நடைகளை வளர்க்கும் தஜீவானந்தராசா தனது பிரச்சினையை இவ்வாறு கூறினார்.

எனக்குச் சொந்தமாக 30 எருமை மாடுகளை வைத்துள்ளேன். எனது நிரந்தர தொழிலும் இதுதான். அதன்மூலம் 6 மாத காலத்திற்கு மாதாந்தம் சுமார் 5000 ரூபாய் படி வருமானம் கிடைக்கும். ஏனைய காலங்களில் பால் கறப்பது குறைவாக இருக்கும். இதனைவிட மாடுகளுக்கு அவ்வப்போது நோய்கள் ஏற்படுகின்றன. அதற்கான செலவுகளும் அதிகம். இக் கிராம மக்கள் சுகாதார வசதியினைப் பெறுவதாயின் பழுகாமம், களுவாஞ்சிகுடி, மட்டக்களப்பு, கல்முனை போன்ற தூர இடங்களுக்கே செல்ல வேண்டியுள்ளது சுரவணையடியூற்றுக் கிராமத்தில் மாத்திரமல்ல அந்தப் பகுதியை மையப்படுத்தியே ஓர் சுகாதாரநிலையம் இல்லாதது அப்பகுதி மக்கள் மத்தியில் ஓர் பாரிய குறையாகவுள்ளது. சுரவணையடியூற்றுக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் அம்பங்கேணி, கோவில் போரதீவு, பழுகாமம், களுவாஞ்சிகுடி போன்ற தூர இடங்களுக்கே தமது கல்வித் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள நாடுகின்றனர். இவ்வூரில் இருந்து கல்விக்காக செல்கின்ற மாணவர்கள் வெளியிடங்களைத் தான் நாட வேண்டியுள்ளது. இதனால் போக்குவரத்துக் கஸ்டங்களையும், நேரவிரயத்தையும் அவர்கள் எதிர்நோக்கியுள்ளதாக சுட்டிக் காட்டுகின்றனர். இந்தக் கிராமத்தில் ஓர் ஆரம்பப் பாடசாலையாவது அமைத்து தமது குழந்தைகளை தமதூரில் கற்பிக்க வேண்டும் என்பது அம்மக்களின் அளவுகடந்த அவாவாகவுள்ளது. அப்படி ஓர் ஒளி பிறக்கும் நந்நாளை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பதாக சுரவணையடியூற்றுக் கிராம மக்கள் கூறுகின்றனர்.

ஏனைய கிராமங்களைப் போல் எமது கிராமமும் மிளிரவேண்டும் என்றுதான் நினைக்கின்றோம். ஆனால் அது கைகூடுதில்லை. மற்றவர்களைப் போல் எங்களையும் அரசாங்கம் கவனத்தில் எடுத்தால் விரைவில் எங்கள் கிராமமும் வளர்ச்சி அடையும்

இது போன்று க.பொ.த. சாதாரணதரம் கற்று 17 வயதுடைய ம.செ.ரமேஸ் கூறுகையில் "ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் எமது கிராமத்தின் பல தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருப்பது ஓர் இளைஞர் என்ற ரீதியில் என்னால் சகித்துக் கொள்ள முடியாமலுள்ளது. வாய்க்கால் போல் காட்சியளிக்கின்றது எமது கிராமத்தில் உள்ள வீதிகள். எமது திறமைக்கு களமமைக்க மைதானம் இல்லை. பகுதி நேரவகுப்புக்களோ மேலதிக வகுப்புக்களோ இங்கு இல்லை. இதனை விட நவீன கல்வி வசதிகள் எவையும் இல்லை" என்றார்.

சுரவணையடியூற்று ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத் தலைவர் நா.காமலிங்கம் எமது கிராமம் பழம்பெரும் தமிழ் கிராமமாகும் இங்குள்ள மக்கள் மிகவும் ஒற்றுமையுடன் வாழ்கின்றார்கள். ஆனால் அவர்கள் வளர்ச்சிப்பாதையில் செல்வது என்பது கல்லில் நார் உரிப்பது போன்றுதான் உள்ளது. மிகவும் முக்கியமாக எமது கிராமத்திற்கு வீட்டுத் திட்டம் அவசியமாக உள்ளது. ஏற்கனவே 'நேர்ப்' திட்டத்தினால் வீடுகள் வழங்கப்பட்டிருந்தாலும் அவை போதாமலுள்ளன. குன்றும் குழியுமாகக் காட்சி தரும் வீதிகள் உடன் செப்பனிடப்பட வேண்டும். ஓர் ஆரம்பப் பாடசாலை அமையப்பெற வேண்டும். கட்டப்பட்டு அரைகுறையாகக் காணப்படும் எமது குலதெய்வத்திற்குரிய ஆலயம் முற்றுப் பெறவேண்டும். தண்ணீர்த்தட்டுப்பாடு நீங்க வேண்டும். இதற்கு எமது ஊரில் உள்ள நீர்த் தாங்கியை உரிய முறையில் பயன்படுத்த சம்பந் தப்பட்டவர்கள் முன்வர வேண்டும். எமது கிராம இளைஞர் யுவதிகளின் எதிர்காலம் கருதி ஓர் சிறியதொரு தொழில் பேட்டையாவது அமைத்துத்தர வேண்டும் என்று வரிசைப்படுத்திக் கொண்டே சென்றார்.

சுரவணையடியூற்றுப் பிரச்சினைகளை அறிந்தவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே இல்லை எனலாம். அரசாங்க அதிகாரிகளாயினும் அரசியல் பிரமுகர்களாயினும் இதுகுறித்து கவனத்திற் கொள்ளாமை மிகுந்த கவலை அளிப்பதாக உள்ளது என சுரவணையடியூற்று கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் மூள்கிறதா தமிழக - கேரள யுத்தம்?

கேரளாவைச் சேர்ந்தவர்கள் ஒரு போதுமே தமிழகத்தை கொஞ்சம் கூட மதிப்பதில்லை. அதுமட்டுமல்லாமல் தமிழகத்துக்கு உச்ச பட்சத் தீங்கு இழைப்பவர்களாகவும் மலையாளிகளே உள்ளனர். இந்தியாவின் அதிகூடிய படிப்பறிவுள்ள மாநிலம் எங்கிற திமிர் வேறு மலையாளிகளிடம் உள்ளது. இந்தப் பின்னணியில் முல்லை பெரியாறு அணைப்பிரச்சினை சமீப காலமாக விஸ்வரூபம் எடுத்து வருகிறது. கேரள மாநிலத்தின் இடுக்கி மாவட்டத்துக்கும் தமிழகத்தின் தென்காசி, தேனி, திருநெல்வேலி மாவட்டங்களுக்கும் இடையில் 1895ல் கட்டப்பட்ட இந்த அணை பழையதாகி வலுவற்றதாகிவிட்டதால் இதை உடைத்து புதிய அணை கட்ட வேண்டுமெனக் கேரளா முழங்கி வருகிறது. இவ்வாறு கட்டப்பட உத்தேசிக்கப்படும் அணை இப்போதுள்ள அணையை விடத் தாழ்ந்த மட்டத்தில் கட்டப்படும் எனத் தெரிகிறது. இவ்வாறு கட்டப்படுவதால் அணையிலிருந்து தற்போது தமிழகத்துக்கு கிடைத்துவரும் நீரின் அளவு புதிய அணையிலிருந்து கிடைக்க மாட்டாது. தமிழக எதிர்ப்புக்கு இதுவே காரணம். மதுராஸ் கொச்சின் சமஸ்தானங்களுக்கிடையே 1886ல் செய்யப்பட்ட ஒப்பந்தப்படி பெரியாறு



ஆட்சிக்கு ஆபத்து அதிகரிக்கும். எனவே தேர்தலை வெல்லக் காங்கிரஸ் அணி வாரிக் கட்டிக்கொண்டு களமிறங்கியுள்ளது. கம்யூனிஸ்ட்டுகளின் எதிரணிக் கூட்டணியும் இலேசில் விடுவதாக இல்லை. இந்த இழுபறியில் முல்லைப் பெரியாறு எங்கே மாட்டிக் கொண்டது என்று கேட்கப்படலாம். அதுதான் இந்திய அரசியல்வாதிகளின் திருகுதாளங்களுக்கு அழகிய உதாரணமாகும். முல்லை பெரியாறு அமைந்துள்ள பிரவம் தொகுதிக்குத்தான் இடைத் தேர்தல் நடக்கவுள்ளது. எனவேதான் இந்தத் திருக்கூத்து. ஆனால் ஒன்றைக் கவனிக்க வேண்டும். கேரள மாநிலம் இந்தியாவிலேயே படிப்பறிவு வீதம் அதிகமான மாநிலமாகும். எனவே மக்களிடையே மனிதமான இனவாத, மொழிவாத உணர்வுகளைத் தாண்ட கேரள மாநிலம் இடமளிக்கும் என்று சொல்ல முடியாது.

2006வரை கேரளாவின் நீர்த்தேக்கங்கள், அணைகள் பட்டியலில் பெரியாறு இடம் பெற்றிருக்கவில்லை. முதல்முறையாக 2006ல் காங்கிரஸ் அரசு இதனைப் பட்டியலில் சேர்த்தது.


## முல்லைபெரியாறு அணை பிரச்சினை விஸ்வரூபம்!

அணையிலிருந்து 999ஆண்டுகளுக்கு தமிழகம் நீர் பெற்றுக்கொள்ள உரிமையுண்டாகிறது. எனினும் கேரள தரப்பிலான சர்ச்சைகளால் 1979ல் நடந்த பேச்சுவார்த்தையில் அணைபற்றி தொழில்நுட்ப ரீதியாக ஆய்வு செய்து வலுவாக அணை உள்ளது என அறிக்கை தரப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். உச்சநீதிமன்றம் 2006ல் இது தொடர்பான வழக்கில் அணை பாதுகாப்பானது என்ற தொழில்நுட்ப வல்லுனர் அறிக்கையை ஏற்று உயரத்தை 136 அடியிலிருந்து 142அடி வரை உயர்த்தலாமெனவும் அணையை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டது. இதன்படி அணையை வலுப்படுத்தும் மூன்று வகை உபாயங்களை தமிழக தரப்பில் பொறியியல் வல்லுனர்கள் உருவாக்கினர்.

இப்படியிருக்க இருதரப்பும் இப்போது சர்ச்சையை கிளப்புவது ஏன்? என்ற கேள்வி எழலாம். கேரளாவில் காங்கிரஸ் தலைமையில் கூட்டணி ஆட்சி நடக்கிறது. அறுதிப் பெரும் பான்மையில் அந்த ஆட்சி தொங்கிக் கொண்டிருக்கிறது (ஆளும் கூட்டணி 71, எதிர்க் கூட்டணி 68 ஆசனங்கள்) அதில் காங்கிரஸ் அணி எம்.எல்.ஏ ஒருவர் சிலமாதங்கள் முன்பு காலமானதும் குறிப்பிடத்தக்கதாகும். இதில் வெல்லாவிட்டால் காங்கிரஸ்

இப்போது அணையை உடைக்கப்போவதாகவும் அதற்கு 40 கோடி ரூபா ஒதுக்கிவிட்டதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது. இம்மாதம் 4ம் திகதி கும்பல் ஒன்று கடப்பாரை சம்மட்டிகளுடன் அணையை உடைக்க வந்தபோது ஒருவாறாக பொலிசார் தடுத்துள்ளனர். எனவே, கேரள அரசே உடைப்போம் என்கிறபோது அதற்கு பாதுகாப்பில் கேரள பொலிசாரே இருப்பது எப்படி சரியானது. மத்திய ரிசேர்வ் பொலிஸ் படையை அனுப்ப வேண்டும் என வைகோ உள்ளிட்ட தலைவர்கள் கேட்கின்றனர். குறிப்பாக வைகோ இன்று நேற்றல்ல பல தடவைகள் இது பற்றிப் பேசியிருக்கிறார் எனவே அடுத்ததாக நடக்கவுள்ள சங்கரன் கோவில் சட்ட சபை இடைத்தேர்தல் காரணமாகவே வைகோ இது குறித்துப் பேசுகிறார் என்று கூறவும் முடியாது. மே மாதம் நடந்த சட்டசபை தேர்தலில் ஜெயலலிதாவால் புறக் கணிக்கப்பட்ட வைகோ போட்டியிடாது விட்டதனால் அ.தி.மு.க ஒருவாறு இந்தத் தொகுதியை கைப்பற்றியது. இப்போது வைகோ கட்சி [illegible] உறுதியாகிவிட்டது. தி.மு.க.வானது வைகோவையும் ஜெயலலிதாவையும் மோத விட்டு வேடிக்கை பார்க்க விரும்புவதாக கூறப் படுகிறது. கடந்த 10வருடத்துக்கு மேலாக தமிழகத்தின் ஆளும் கட்சியே சகல இடைத் தேர்தல்களிலும் வெல்வது வழக்கமாகும். தி.மு.க ஆட்சியில் கடந்த சகல இடைத் தேர்தலிலும் தி.மு.க.வே வென்றது. அ.தி.மு.க ஆண்ட போது அ.தி.மு.க.வே வென்றது. விதிவிலக்காக இப் போது சங்கரன் கோவிலை வைகோ கட்சி வென்றால் அ.தி.மு.க.வுக்கு நிச்சயமாக அது ஒரு மானப்பிரச்சினையாகும்.

சமீபகாலமாக வைகோ தமிழ்நாட்டின் மக்கள் பிரச்சினைக்கு முகம் கொடுப்பதால் அவருக்கு முன்பில்லாத வரவேற்பு இப்போது கிடைத்து வருகிறது. உண்மையில் ராஜீவ் கொலை காரணமாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு வைகோ குரல் கொடுக்கும்போது தமிழகத்தில் பலர் எரிச்சலடைவது வழக்கமாக இருந்தது. எனவே சில காலம் தமிழகத்தின் பிரச்சனைகளுக்கு போராட்டம் நடத்தி அரசியல் ரீதியாக தன்னைப் பலமாக்கிக்கொண்டு அதன்பின் இலங்கைப் பிரச்சினையில் அவர் இறங்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. அதுவேளை அதையே தான் வைகோ செய்கிறாரா என்றும் நினைக்கத் தோன்றுகிறது. தி.மு.க. வலுவற்ற கட்சி என்ற பெயரோடு திண்டாடுவதால் அவ்விடத்தை நிரப்ப வைகோ முயற்சிக்கக் கூடும்.



சுரேந்திரஜித்

**2006 வரை கேரளாவின் நீர்த்தேக்கங்கள், அணைகள் பட்டியலில் பெரியாறு இடம் பெற்றிருக்கவில்லை. முதல் முறையாக 2006ல் காங்கிரஸ் அரசு இதனைப் பட்டியலில் சேர்த்தது. இப்போது அணையை உடைக்கப் போவதாகவும் அதற்கு 40 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "யாழ் மண் வீரமும், கலையின் மீது காதலும் கொண்டது"

## 'தப்பு' இசைக் கலைஞர் ஆடலரசு வேணு



■ நேர்காணல் : எஸ். வி. மேனகா

"சாதி, மதம், மொழி கடந்து, சமூக மாற்றத்தை கொண்டு வரவேண்டும் அதற்கு நான் எடுத்துக் கொண்ட ஆயுதம் பறை

யாழ்ப்பாணத்தின் மீது நான் கொண்ட காதலின்பால் இந்த மண்ணுக்கு வந்து இம்மண்ணின் மக்களைப் பார்க்க கிடைத்த தருணத்திற்காக சந்தோசமடைகிறேன்" என்றார் ஆடலரசு வேணு.

சென்னையிலிருந்து 40 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் முரிச்சம் பேடு கிராமத்தில் வெங்கடேசன்– அன்னமாள் தம்பதியினரின் பிள்ளைகளில் மூத்தவர் வேணு கோபால்.

கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறைமையில் வளர்ந்தவர் சட்டத்துறை பட்டம் பெற்றவர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் இதழியல் முதுகலைமாணி மாணவனாக உள்ளார்.

இவர் சமூக விடுதலைக்காகவும், மாற்றத்திற்காகவும் உழைப்பவர். ஆதித்தமிழர் கலைக்குழுவில் சமூகப் பொறுப்புடையவராக இருக்கின்றார்.

25வது வயதிலேயே ஆடலரசு என்றபெயர் பெற்றுள் ளார். இவரது கலையார்வம், ஈடுபாடு, செயற்திறன் என் பன யாழ் மண்ணையும் விட்டு வைக்கவில்லை. (பு.வீ.வி) செயற்திறன் அரங்க இயக்கத்தின் அழைப்பில் யாழ் மண்ணிற்கு வருகை தந்து 'பறை' எனும் கலைப் பயிற் சியையும், நிகழ்ச்சியையும் யாழ் பல்கலைக்கழகம் கோப் பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, யாழ்ப்பாணக் கல்வி யற் கல்லூரி ஆகியவற்றில் நடத்தியுள்ளார். அவரது கலை யார்வத்தை வெளிக்காட்டும் ஒரு நேர்காணல் இது.

கேள்வி

இந்தக் கலையில் எப்போது உங்களை இணைத்துக் கொண்டீர்கள்?

பதில்

பன்னிரண்டு வயதிலேயே இக் கலை பற்றி அறிந்து கொண்டேன். எங்கள் கிராமத்தவர்கள். பறை அடிக்கும் இளைஞர்களைக் கூட்டி ஒரு மாநாடு நடத்தினார்கள். அதிலே கலந்து கொண்ட ஒரு பெரியவர் பறை அடிக்கும் போது அடியாடி அதனை அடிக்கும் முறையைச் செய்து காண்பித் தார். அந்த மாநாட்டில் நானும், என்னுடைய மாமாவும் உறவினரும் பங்கேற்றிருந்தோம்.

ஆடி அடிப் பறை அடிக்கும் அழகு எனக்கு மிகவும் பிடித்தமாக இருந்தது. நானும் அதனைப் பயின்று ஒத்திகை பார்த்தேன். மேடையில் அதனைச் செய்து காண்பித்தேன். இப்பொழுது இந்த யாழ்ப்பாண நிகழ்ச்சிகள் எனக்கு அதனை நினைவூட்டுகின்றன.

சென்னையில் அண்ணா அரங்கிலே சிறப்பாக எனது பறை ஆட்ட நிகழ்ச்சியை நடாத்தினேன். அது என்னால் மறக்கமுடியாத நாளாகும்.

கேள்வி

இது உங்களது பரம்பரையான பாரம்பரிய கலையா?

பதில்

பறை அடிப்பது எங்கள் கலை இல்லை. ஆனால் பாரம்பரியமான கலை. தாத்தா ஒரு கூத்துக்கலைஞர் கூத்து வாத்தியார் நான் பிறந்து ஒரு வருடத்தில் இறந்திட்டார். வேணுகோபால் என்பது பேரர் அவர் வைத்ததுதான்.

என்னுடைய மாமா இந்தக் கலையில் ஈடுபாடு கொண்டவர். உடுக்கைப்பாட்டு பாடல்கள், பறை இசை என்பவற்றில் ஈடுபாடு உள்ளவர். அவர்தான் இந்தப் பறையை எனக்குக் காண்பித்தார்.

கேள்வி

உலகில் உள்ள கலைகளுள் இந்தக் கலையைத் தேர்ந்தெடுத்து வளர்த்தமைக்கு என்ன காரணம்?

பதில்

படிப்பறிவில்லாத பாமரனாய் முன்னர் இருந்த வனைப் பாதுகாத்துக் கொள்ளவும், மகிழ்ச்சிப் படுத்திக் கொள்ளவும் கலைகள் தேவைப்பட்டன. விலங்கை அடித்துத் தனக்கு உணவாகப் பெற்றுக் கொண்டான். அதன் இறைச்சியை உண்டு தோலை மரத்தில் பேலேயோ செடியின் மேலேயோ வீசி னான். அது காய்ந்ததன் பின்னர் தலைக்கு ஆடை யாக்கினான். காற்றடிக்கும் வேளையில் மரங்களின் கிளைகள் தோலின் மீது உரசும் போது கேட்கும் சத் தத்தில் பறவைகள் பறந்தன அதுகண்டு சிந்தித் தான். சத்தத்திற்கு பறவைகளைக் கலைக்க இது ஆயுதமாகும்.

விலங்குகளை விரட்ட நெருப்புமூட்டி அதன் பக்கத்தில் இருவர்கள் நெருப்பு வைக்கையில் உடை யில் ஒரு தாக்கம் ஏற்படுகின்றது. அதனால் சத்தங் களும் ஏற்படுகின்றன.

ஒரு குச்சி கொண்டு தோலினால் ஆன உடை யில் தட்டும் போது ஏற்படும் சத்தத்தினால் விலங் குகளும் பயந்து ஓடுகின்றன.

குழுமமாக வாழ்ந்த மக்களுக்குத் தொடர் பாடலை மேற்கொள்ள வழிகள் இருக்கவில்லை. இன்று போல் ஈமெயில், இன்ரநெற் பேஸ்புக் நியூஸ் பேப்பர், ரீவி எதுவுமே இல்லை. தோலைப் பயன் படுத்தி அடித்துச் சத்தமெழுப்பி இன்னொரு குழு விற்கு குறிப்பைக் கொடுத்தான். தொலைத் தொடர்பு சாதனமாக இந்தப் பறை இசைக்கருவி முன்பு இருந்திருக்கிறது.

பறை ஒரு இழிவான கலை என்றே எண்ணுகின் றனர். இழிவான இசைக் கருவியாகவே இதனைப் பார்க்கின்றனர். இசைக்கருவிகளுக்கெல்லாம் தாய்க்கருவியானது இந்தப் பறை. இதனை சூடு காட்டி மீண்டும் மீண்டும் பயன்படுத்தலாம்.

தமிழ் நாட்டில் பறையர் என்ற சமூகம் உள்ளது. அவர்கள் பறை இசைப்பதில்லை. அச்சமூகத்தில் வெட்டியான் என்றொரு பிரிவினர் உள்ளனர். அவர்கள் பறையை அடிப்பார்கள்.

கோயில் திருவிழா, சாவு வீடுகள், கலியாணம், சடங்கு என பறை இசைக்கும் முறைகள் நிகழ்ச் சிக்கு ஏற்ப வேறுபடுகின்றன.

சாதி வேறுபாடு இல்லாமல் இக்கலையைப் பழ குகிறோம். பரதநாட்டியம், கிளாசிக், கர்நாடக இசை என்பன குறிப்பிட்ட குழுவினராலே செயற் படுத்தப்படுகிறது. ஆனால் பறை பாரம்பரியமா னது. பறையை என்னுடைய அப்பா இசைக்க வில்லை நான் பயின்றிருக்கிறேன். சாதி அடக்கு முறையை ஒடுக்கவே நான் அதனைப் பயின்றேன். ஏற்றத் தாழ்வுகள் இருக்கக் கூடாது. ஏழை பணக் காரன் என்ற உயர்வு தாழ்வுகள் கூடாது. எல்லோ ரும் சமம். கலைகள் மக்களை ஒன்றிணைக்கின்றது. இக்கலையை எனக்குப் பின் வருவோர் வளர்த்துச் செல்ல வேண்டும். யாழ். பல்கலைக்கழகம் அதனை வளர்ப்பதற்கு ஊக்கம் தருவதாக உணரு கிறேன்.

கேள்வி

தமிழ் நாட்டில் இந்தக் கலையின் ஆதிக்கம் தற்போது என்ன நிலையில் உள்ளது.

பதில்

பறையை வாசிப்பவர்கள் பறைக் கலைஞர்கள் என்ற எண்ணம் உருவாகவில்லை. அது ஒரு சமூகத் திற்கு உரியது என்ற எண்ணத்தில் அதற்கான பண மும் கொடுக்கப்படுவதில்லை. இங்கே இரண்டு வகையான கலைஞர்கள் உள்ளனர். நிகழ்த்து கலை ஞர்கள், பாரம்பரிய கலைஞர்கள். அவர்களில் பாரம்பரியக் கலைஞர்களுக்கு நிறைய அடக்கு முறைகளும் பொருளாதாரச் சிக்கல்களும் உள்ள தால் அதில் ஈடுபடத் தயங்குகின்றனர். இந் நிலையை மாற்ற அறிஞர்கள் முற்போக்கு சிந்தனை யாளர்கள் முன்வரவேண்டும்.

கேள்வி

நீங்கள் யாழ்ப்பாணத்தில் வந்து இந்தக் கலை யினை நிகழ்த்துவதற்கான காரணம் என்ன?

பதில்

யாழ்ப்பாணம் ஒரு போர்களம் என்றே அறிந் திருந்தேன். நான் வரக் காரணமானவர்கள் செயற் திறன் அரங்கச் செயற்பாட்டாளர்கள். பறை இசை மீது இங்குள்ளோர் விருப்பம் உள்ளார்கள். எனவும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை வளர்க்கும் ஆர்வமும் அவர்களிடம் உள்ளது எனவும் அறிந்திருந்தேன்.

யாழ் மண் வீரமும், கலையின் மீது காதலும் கொண்டது என்பதை உணர்ந்துள்ளேன். அதனாலேயே இங்கு வந்தேன்.

**கேள்வி**

கலையில் யாழ்ப்பாண பெண் பிள்ளைகளது ஆர்வம் எவ்வாறு இருக்கிறது?

**பதில்**

பெண்கள் வீடுகளுக்குள்ளேயே இருக்கும் நிலை மாறிவிட்டது. பறையை வாசிப்பதற்கு அவர்களாலும் முடியும் என்ற நிலையும், அவர்களுக்கு அனைத்துத் திறன்களையும் பெறும் ஆர்வமும் உள்ளது. யாழ்ப்பாணப் பெண்கள் திறமையான கலைஞர்கள். விடுதலையையும் வெற்றியையும் அவர்கள் விரும்புகிறார்கள். கடவுள் பக்தி மிக்கவர்கள். இவ்வாறுக்கு விரதம் மாட்டுத்தோலில் தயாரிக்கப்பட்ட பறையைத் தொடமாட்டேன் நாளைக்கு வருகிறேன் என்றார்கள். மறுநாள் பறையை எடுத்து அடித்து அதனைக் கிழித்துப் போட்டார்கள். அதனால் கங்களுக்கு வேறு பறை தாருங்கள் என அவர்கள் கேட்டபோது மகிழ்ச்சியாக இருந்தது. பறையிசையின் வெற்றி அது.

**கேள்வி**

பறைக் கலையை வளர்ப்பதற்கு எந்தளவு தூரம் பாடுபட்டிருக்கிறீர்கள்?

**பதில்**

ஆதி தமிழர் இயக்கமும் அதன் செயலாளர் வினோத் அவர்களும் இக்கலையை வளர்க்க உதவியவர்கள். சமூகப் பண்பாட்டைக் கைக்கொண்டால் சமூக விடுதலையை வெற்றி கொள்ளமுடியும். எனது மாமா அந்த இயக்கத்திலிருந்து கொண்டே என்னை அதனுடன் இணைத்துக் கொண்டார். நான் மாநில ஒருங்கிணைப்பாளராக இருக்கிறேன். ஆயிரம் கலைஞர்களை உருவாக்குவதே எனது நோக்கம். யாழ் பல்கலைக் கழக மாணவர்களும் அவர்களுக்குள் அடங்குவர் அது எனக்குப் பெருமை தருகிறது.

2004 இல் மும்பையில் நடந்த சமத்துவ மாநாட்டில் கலந்து கொண்டேன். ஒடுக்கப்பட்ட சமூகங்களிலெல்லாம் சமூக இசை உண்டு. தென்னாபிரிக்க கறுப்பரிடத்திலும் பறை இசை இருக்கிறது. என்னுடைய பறை இசையும் மாநாட்டில் இசைக்கப்பட்டது.

டெல்லியிலும் தெருக்களில் பறை இசைத்து நடந்தேன். தொலைக்காட்சிகளிலும் தோன்றி இசைத்தேன்.

**கேள்வி**

இந்தியாவில் பொப்பிசைப் பாடல்களில் ஆதிக்கம் கூடுதலாக இருக்கிறது. அந்த வகையில் பறைக் கலையின் போட்டித் தன்மை எவ்வாறு உள்ளது?

**பதில்**

பறை இசையிலிருந்து நிறைய இசைத்துளிகள் இசையில் எடுத்தாளப்படுகின்றன. இசைக்கருவி ஒருங்குபடுத்தல், நெறிப்படுத்தல், குறைத்தல் எல்லாமே ஒரே ஒரு இசைக்கருவி மூலம் செய்யலாம். எலெக்றோனிக் ரெக்னோலஜி வளர்ந்துள்ளது கீபோட், கிற்றார் இசை வாத்தியங்கள் எல்லாமே பறை மீது ஆதிக்கத்தை செலுத்துகின்றன. பறையோடு கிற்றாரைச் சேர்த்தால் நல்லா இருக்கும் தயவு செய்து கிற்றாரையும் பறையையும் சேர்த்து கிளப்பிலா ஒரு புறோக்கிறாம் பண்ணும்படி கேட்கிறார்கள்.

வெளிநாடுகளில் இந்த பறை இசைக்கு வரவேற்பு இருக்கிறது. எங்களது பணி அங்கு தொடர்கிறது.

பறை இசையை வளர்க்காவிடினும் அதன் வளர்ச்சியைத் தடுக்காமல் இருந்தால் நன்று. பறை இசையின் துளிகள் பரத நாட்டியத்தில் நிறைய கலந்துள்ளது. பரதநாட்டியத்தில் உள்ள ஒன்று "தத்தகிட நத்தகிட தரிகிட தோம்" இதை பறையடிச்சே "தத்தகிட தக்கிட நந்தகிட தரிகிட தோம்" என்று இசைக்கக் கூடிய அளவிற்கு இன்று வளர்ந்திருக்கிறது.

தற்போதைய இசைக் கருவிகளை அடிச்சா அரங்குக்குள்ளே தான் கேட்கும் பறையை அடிச்சா ஐந்து கிலோ மீற்றருக்கு குறையாமல் கேட்கும்.

பாரம் பரியமாக வேம்பு, மாட்டுத் தோல் கொண்டு செய்யப்படும் பறை தான் என்றும் நல்லது.

**கேள்வி**

தமிழ் நாட்டில் உங்களுக்கு கிடைக்கிற வரவேற்பும் யாழ் மண்ணில் கிடைக்கும் வரவேற்பும் உங்களது பார்வையில் எவ்வாறு இருக்கிறது?

**பதில்**

தமிழ் நாட்டில் கலை நிகழ்ச்சிகளை செய்யும் போது வரவேற்புள்ளது. தமிழ் நாட்டின் எல்லாக் கிராமங்களுக்கும் இந்தப் பறை இசை தெரியாது. ஒரு குறிப்பிட்ட கிராமத்து மாவட்டத்திலதான் இந்த மாதிரி புறோக்கிராமெல்லாம் நடக்கும்.

ஆனால் இன்றைக்கு அங்குள்ள வரவேற்பைவிட இங்குள்ளவர்களின் வரவேற்பு அதிகமானது என்று தான் சொல்வேன்.

கலையின் வளர்ச்சி பாரம்பரிய தொடர்ச்சி தற்போது அது அறுபட்டுப்போய் உள்ளது. அறுபட்டுப் போன அந்தக் கலையை இணைப்பதன் தாக்கம் நிறையவே இருக்கின்றது.

தமிழர் பாரம்பரிய கலைகளை கட்டாயம் பயில வேண்டும். இதை நான் உணர்ந்துள்ளேன். இங்கே பார்த்தேன் தமிழ் நாட்டிலும் மேலான வரவேற்பு யாழ்ப்பாணத்தில் உள்ளது.

**கேள்வி**

யாழ் மண்ணில் இருந்து திரும்பி உங்கள் ஊருக்கு செல்ல இருக்கின்ற நிலையில் இந்த யாழ் மண்ணுக்கும், சமூகத்திற்கும் எதனை விட்டுச் செல்கின்றீர்கள், எதை சொல்லிச் செல்கிறீர்கள்?

**பதில்**

இந்தியாவிலிருந்து வந்து ஒரு கலையைச் சொல்லிக் கொடுத்தல் சாதாரணமானது என நினைத்தேன். ஆனால் ஏதாவது ஒன்றை இங்கே விட்டுச் செல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். என்னிடம் விட்டுச் செல்வதற்கு எந்த உடைமையும் இல்லை.

என்னிடம் இருப்பது உயிர் மட்டும் தான். உயிரை நான் விட்டால் மீண்டும் இங்குள்ள மாணவர்களைப் போன்று வேறுபலரையும் உருவாக்க முடியாது அதனால் என்னுடைய உடல்மொழியை இந்த மண்ணிற்கு விட்டுச் செல்கின்றேன்.

நிச்சயமாக இந்த மக்களைப் பற்றி அவர்களது ஆர்வத்தைப் பற்றி எப்போதும் எங்கும் பேசுவேன். இந்தக் கலையை இத்துடன் விட்டு விடாமல் வளர்க்க வேண்டும் என யாழ் சமூகத்திற்கு சொல்லிச் செல்கிறேன்.

**கேள்வி**

பொதுவாக இங்குள்ள மக்கள் உங்களது பார்வையில் எவ்வாறு இருக்கின்றனர்?

**பதில்**

யாழ்ப்பாண மக்கள் ரொம்ப பாதுகாப்பாக இருக்கிறார்கள். இவர்களது உடை, உணவு, பழக்க வழக்கம், மொழி, சொல்லாடல் வித்தியாசமாக உள்ளதே தவிர தமிழர் எல்லாருக்குமே ஒரே பண்புதான். காதல், வீரம் இரண்டும் தான் தமிழருக்குச் சொந்தமான, உடம்பிலே பிறந்த உடமை. அதனை இங்கேயும் பார்த்தேன். உடைகளில் மேலைத்தேசம் கலந்திருந்தாலும் உள்ளத்தில் இருக்கும் உணர்வுகள் மாறவில்லை. தமிழன் நான் தமிழன் என்ற உணர்வு மறைந்து போகின்ற கலைக்கு புத்துயிர் வழங்கப்பட்டுள்ள தருணம் இது. இதனை யாழ் சமூகம் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

# ஆப்கானிஸ்தானில் அதிகரித்துவரும் பெண்களுக்கெதிரான வன்முறைகள்

திருமணப்பேச்சுவார்த்தைக்கு மறுப்புத் தெரிவித்த ஒரு இளம் பெண்மீதும் அவரது குடும்பத்தவர் மீதும் அசிட் வீசப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இது நடைபெற்றுள்ளது. நள்ளிரவு ஆப்கானிஸ்தானின் வடபுறத்தே உள்ள நகரமான குண்டுஸ் எனும் இடத்தில் வீட்டினை உடைத்து உட்புகுந்த துப்பாக்கி ஏந்திய முகமூடி மனிதர்கள் வீட்டிலுள்ளோர் மீது அசிட்டினை வீசியமையால் 17வயதுடைய மும்தாஜ் எனும் அழகிய இளம் பெண் மிகவும் மோசமான பாதிப்புக்குள்ளாகியுள்ளார்.

மும்தாஜ் மீது இலக்கு வைத்து நடத்தப்பட்ட இத்தாக்குதலின் நிமித்தம் அவருடைய தாயார் மற்றும் நான்கு சகோதரிகளும் பலத்த எரிகாயங்களுக்குள்ளாகினர்.

"நள்ளிரவில் பலவந்தமாக வீட்டினுள் புகுந்தவர்கள் என்னைத் தாக்கி ஓர் பெரிய கயிற்றில் கட்டிப் போட்டனர். பின்பு உட்புகுந்த அவர்கள் எனது மனைவி மற்றும் மகள்மாரையும் தாக்கிவிட்டுச் செல்லும் போது மகள்மார் மீது அசிட்டை வீசிவிட்டுச் சென்றார்கள்" எனக் கூறினார் பாதிக்கப்பட்டவர்களின் தந்தை.

முகமட்டின் மூத்தமகளான அழகி மும்தாஜைத் திருமணம்புரிய இராணுவக் கட்டளையதிகாரி ஒருவர் விருப்பம் தெரிவித்திருந்தார். ஆனால் குடும்பத்தினர் அதனை நிராகரித்துவிட்டு மும்தாஜினை வேறொருவருக்கு நிச்சயம் செய்துவிட்டனர். எனவே இச் சம்பவத்தின் பின்னணியில் அந்த இராணுவ அதிகாரியே இருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகின்றது.

காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வருமுன்னர் தாக்குதலாளிகள் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர்.

ஆப்கான் உள்நாட்டமைச்சர் பிஸ்முல்லா முகம்மதி இது குறித்து விசாரணையை மேற்கொண்ட உடனடியாக இச் சம்பவத்திற்குப் பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்துமாறு காவற்துறையினருக்கு விசேட உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, ஆப்கானின் பிறிதொரு இடத்தில் மற்றுமோர் சம்பவம்- உறவினர் ஒருவரால் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டது தொடர்பில் சிறையிலடைக்கப்பட்டுள்ள பெண்ணை விடுவிக்கும்படி ஜனாதிபதி கமீட் கர்சாய் கட்டளையிட்டுள்ளார்.

அப்பெண் கைதியின் பெயர் குல்னாஸ். இரைது விடுதலை கோரி 5000ற்கும் மேலான பெண்களின் கையொப்பங்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றினையடுத்தே இக்கட்டளையை ஜனாதிபதி கமீட்கர்சாய் விடுத்துள்ளார்.

குல்னாஸ் உறவினர் ஒருவரினாலேயே கற்பழிக்கப்பட்டுத் தற்சமயம் சிறையில் இரண்டுவருடங்களைக் கழித்தும் விட்டார். அதுமட்டுமன்றி காபூலில் உள்ள சிறைக்கூடமொன்றில் இவரை வல்லுறவுக்குட்படுத்தியவரின் மூலம் கிடைத்த குழந்தையினையும் வளர்த்துவருகின்றார்.

அதுமட்டுமல்லாது, குல்னாஸ், விடுதலையடைவதாயின் தன்னைக் கெடுத்தவரையே திருமணம் செய்ய வேண்டிய சிக்கலை எதிர்கொள்ளவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விடயமானது ஆப்கானில் பெண்கள் உரிமைகளின் நிலையைக் கோடிட்டுக் காட்டுவதாகவுள்ளது.

அமெரிக்கப் படையினரின் பத்துவருடகாலப் பிரசன்னத்தின் பின்னரும் கூட பெண்களுக்கெதிரான இரக்கமற்ற சட்டங்களை விதிக்கும் தலிபான்களின் ஆதிக்கம் இன்னமும் நிலவுவதையே இது காட்டுகின்றது.

குல்னாஸ் விடயத்தில் ஒலித்த கண்டனக்குரல்களைத் தொடர்ந்து ஜனாதிபதி கர்சாய் நீதித்துறை அதிகாரிகளைக் கூட்டி ஆலோசனை நடத்தி அவளை விடுவிப்பதற்குக் கடந்த வாரம் முடிவு செய்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகள் "குல்னாஸ், அவளைக் கெடுத்தவனையே மணம்புரிய வேண்டும் அல்லாவிடில் அவளை விடுவிக்கும் பட்சத்தில் ஆப்கானியத் தீவிரப் பழமைவாதிகளால் அவளுக்கு ஆபத்துகள் நிறைய உண்டு" எனத் தெரிவித்தனர்.

குல்னாஸ் இதற்கு ஒப்புதலளித்துள்ளார். ஆனால் ஒரு நிபந்தனையுடன் அதாவது அவளது சகோதரரை அவளைக்



கெடுத்தவரின் சகோதரி மணக்கவேண்டுமென்பதே அது வாதும். இதுவொன்றே தனது எதிர்கால வாழ்வில் அவரிடமிருந்து தனக்குப் பாதிப்பு ஏதும் நடவாததை உறுதி செய்யும் என்பது குல்னாசின் எண்ணமாகும்.

கடந்த ஒரு தசாப்தகாலமாக ஆப்கானிஸ்தானில் சர்வதேச உதவியாகப் பலகோடிக் கணக்கான டொலர்கள் கொட்டப்பட்ட போதிலும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் அங்கு குறைவதற்குப் பதிலாக அதிகரிப்பதையே காணமுடிகிறது.

ஆப்கான் சுயாதீன மனித உரிமைகள் ஆணைக்குழு 2010 ஆம் ஆண்டு முழுவதுமாகப் பதிவு செய்து வைத்துள்ள 2700 எண்ணிக்கையான பெண்களுக்கெதிரான வன்முறைகளுடன், 2011ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் மட்டும் பதிவு செய்யப்பட்டுள்ள 1026 எண்ணிக்கையான வன்முறைகளும் இதனை உறுதி செய்கின்றது.


அத்துடன் 'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தின் ஒக்ரோபர் அறிக்கையின் புள்ளிவிபரங்களின்படி 87வீதமான பெண்கள் ஆப்கானில் உடல் ரீதியாக, உளரீதியாக அல்லது பாலியல் ரீதியாக வன்முறைகளுக்குள்ளாக்கப்படுகின்றனர் என்பது தெட்டத்தெளிவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவம்

# இதயத்தில் ஓட்டை என்ன செய்யலாம்?



**கேள்வி: 9 மாதமாகும் எனது இரண்டாவது குழந்தைக்கு இதயத்தில் ஓட்டை (PDA) ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள். இதற்கு என்ன செய்ய வேண்டும்?**

**பதில்:** 'PDA' என்றால் 'Persistent Ductus Arteriosus' என்பதன் சுருக்கமாகும். இது பிறவியிலேயே உண்டாகும் இதயம் (Congenital Disease) சம்பந்தப்பட்ட நோயாகும். இது பெரும்பாலும் பெண் குழந்தைகளுக்கு வரும். இதயத்திலிருந்து கிளம்புகின்ற இரண்டு முக்கிய இரத்தக் குழாய்கள் Aorta-இது இடது வென்ட்ரிக்கிளின் அறையிலிருந்து இரத்தத்தை நுரையீரலுக்கு கொண்டு செல்லும். குழந்தை பிறப்பதற்கு முன்பு (Fetal Life) இந்த இரண்டு இரத்தக் குழாய்களையும் 'Ductus Arteriosus' என்ற சிறிய இரத்தக் குழாய் இணைத்திருக்கும். பிறந்தவுடனேயே சொந்தமாக, சுவாசமாகப் பிறந்த குழந்தை தன் நுரையீரலைப் பயன்படுத்தி சுவாசிக்கத் தொடங்கும் போது இந்த 'Ductus Arteriosus' என்ற இரத்தக் குழாய் மறைந்துவிடும். அப்படி சாதாரணமாக மறைந்து போகக்கூடிய இரத்தக் குழாய் ஏதாவது காரணத்தால் மறையாது போனால் நோய் ஏற்படுகிறது.

இந்த 'Ductus Arteriosus' மிகச் சிறியதாகவும் இருக்கலாம் சிலருக்கு மிகப்பெரிய அளவிலும் இருக்கலாம். சிறிய அளவிலிருந்தால் பிரச்சனை இல்லை. தொந்தரவும் அதிகம் இருக்காது. அவர்கள் தொடர்ச்சியாக டாக்டரின் ஆலோசனை பெற்று பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு பல்வேறு நோய்க்கிருமிகளால் 'Endocarditis' என்னும் நோய் வராமல் 'Antibiotic' மருந்தை Prophy-laxis- ஆக கொடுத்து வர வேண்டும்.

பெரிய அளவில் 'Shunt' இருந்தால் குழந்தைக்கு மூச்சு விடக்கஷ்டம் (Dys-pnoea) ஏற்படும். வளர்ச்சி குன்றிவிடும் (Retarded Growth). அப்படி இருந்தால் 'Ductus Arteriosus' அந்தக் குழாயைத் தடை செய்ய வேண்டும். (Percutaneous Occulsion/ Division) இல்லாவிட்டால் அறுவை சிகிச்சை செய்ய வேண்டி வரும். மீண்டும் இதய நோய் நிபுணரிடம் காண்பித்து Ech-ocardiography செய்து அதற்கேற்ப சிகிச்சையை மேற்கொள்ளுங்கள்.

**கேள்வி: உள்ளங்கை மற்றும் உடலில் அதிக வியர்வை ஏற்படுகிறது. இது எதனால்?**

**பதில்:** உடலில் அதிகமான அளவு வியர்வை உண்டாவதை அதிலும் குறிப்பாக உள்ளங்கை மற்றும் அக்குள் பகுதியில் வியர்வை உண்டாவதை ஆங்கிலத்தில் 'Hyperhidrosis' என்று அழைக்கிறார்கள். இது பெரும்பாலும் அதிக உஷ்ண சூழ்நிலையாலும் மனப்பிரச்சினைகளாலும் எளிதில் உணர்ச்சிவசப்படுவதாலும் ஏற்படுகிறது. ஆனால் இவ்வித காரணங்கள் இல்லாமலேயே 0.6 % முதல் 1 % சதவிகித மக்களுக்கு இது ஏற்பட வாய்ப்பு உண்டு.

இது போன்றவர்களுக்கு நாளமில்லாத சுரப்பிகளால் ஏதாவது நோய் உள்ளதா என கண்டறிய வேண்டும். (உ-ம்): (Hyperhidrosis) அதிக அளவு தைராய்டு சுரப்பி நீர் உண்டாகுதல், நீரிழிவு நோய், (Diabetes Mellitus) அதிக அளவு உடல் வளர்ச்சிக்குத் தேவைப்படும் பிட்யூட்டரி நீர் சுரத்தல் (Hyperpituitarism) & (Acromegaly) மற்றும் Carcinoid Syndrome, Phaeochromocytoma போன்ற நோய்கள் நீண்டநாள் ஏதாவது நோயினால் உடல் பாதிக்கப்பட்டு இருந்தாலும் (Chronic Infection) நரம்பு சம்பந்தப்பட்ட கோளாறுகளினாலும், (Autoimmune Neuropathy), உடலில் யூரிக் அமிலம் அதிகம் உண்டாகுவதால் ஏற்படும் 'Gout' நோயினாலும் இது ஏற்படலாம். எனவே இந்த நோய்கள் ஏதாவது உள்ளதா? என மருத்துவ பரிசோதனைகளின் மூலம் அறிந்து சிகிச்சை பெற வேண்டும்.

மருத்துவ ரீதியாக......

வியர்வை உண்டாகுமிடத்தில் போட்டுக் கொள்ளும் அலுமினிய குளோரைட் ஹெக்ஸாஹைட்ரேட் (Aluminium Chloride hex-ahydrate) இதனை பூசிக்கொள்ளலாம்.

இதே போன்ற பல்வேறு 'Steroid' மருந்துகளும் உள்ளன. கல்சியத்தின் செயல்பாட்டை



தடை செய்யும் 'Diltiazem' என்ற மருந்தும் பல்வேறு விதமாக 'Acetylcholine'னை தடை செய்யும் 'Anticholinergic' மருந்துகளும் பயன்படுத்தப்படுகின்றன. 30வதுவிகித பேருக்கு மருத்துவ சிகிச்சை பலனை அளிக்காத காரணத்தால் வாய் வழியாக குழாயை விட்டு அறுவை சிகிச்சை (Endoscopic Transthoracic Sympat-hectomy) செய்ய வேண்டி வரும்.

## சிறு நீரகக் கல் நோயாளிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

உணவுப்பழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மனித குலத்துக்கு பல்வேறு நோய்களை பரிசாகத் தந்து கொண்டு இருக்கின்றன.

மனநிலை பாதிப்புக்கு ஆளாவது அதிகரித்து வருகிறது.

முன்பு 40 வயதுக்கு மேல் ஏற்பட்ட நீரிழிவு நோய் இப்போது குழந்தைப் பருவத்திலேயே வந்து விடுகிறது. மனஅழுத்தம் மற்றும் நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே வருகிறது.

சிறுநீரகக் கல் பாதிப்பு பொதுவாகக் கோடைக் காலத்தில் தான் அதிகமாக ஏற்படுகின்றது. சிறுநீரகக் கல் என்பது கல்சியம் மற்றும் யூரிக் அமிலத்தின் கூட்டுக் கலவை ஆகும். அறிகுறி இருக்காது. இந்தக் கல் கிட்னியில் அதாவது சிறுநீரக பையில் இருக்கும் வரை அது தோன்றி இருப்பதற்கான எவ்வித அறிகுறியும் தெரியாது. சிறுநீரகப் பாதையில் அது பயணிக்கும் பொழுதுதான் குழாயில் அடைப்பு ஏற்பட்டு கடுமையான வலி உண்டாகிறது.



சிலரால் அந்த வலியைத்தாங்க முடியாது. அப்போது தான் சிறுநீரகத்தில் கல் உருவாகி இருப்பது தெரிய வரும்.

சிறுநீரகக் கல்லை அகற்ற இரண்டு விதமான சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. சிலருக்கு அறுவைச் சிகிச்சை தேவைப்படும். சிலருக்கு மருந்து மாத்திரை மூலம் குணப்படுத்திவிடலாம்.

நகரமயமாக்கப்பட்ட வாழ்க்கை முறைகள், நகரத்தில் அதிகரித்துள்ள வெப்பநிலை, அதிகப்படியான குளிர்ச்சி போன்றவைதான் இதற்குக் காரணம்.

குளிரூட்டப்பட்ட அலுவலகங்களில் நாள் முழுவதும் உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்கு அவர்கள் உணராமலேயே ஆண்டு முழுவதும் சிறுநீரகத்தில் கல் இருந்து வரும்.

குளிரூட்டப்பட்ட அறையில் இருப்பதால் இவர்களுக்கு தாகம் எடுப்பதில்லை. இதனால் உடலுக்கு தேவையான தண்ணீரை இவர்கள் எடுத்துக் கொள்வதில்லை. இதனால் உடலில் உப்புச் சத்து அதிகரிக்கிறது. இது சிறுநீரக கல் உருவாக வாய்ப்பாகி வருகிறது.

நோயாளிகளில் அதிகமானோர் 25 முதல் 45வயதினர் ஆவார்கள். அவர்களில் பெரும்பாலானோர் தகவல் தொழில் நுட்பத் துறையில் பணிபுரிபவர்கள். இளம் வயதினர் அதிக உப்புச் சத்து கொண்ட உணவு வகைகளை விரும்பிச் சாப்பிடுகின்றனர்.

துரித உணவுகளில் உப்பு, காரம் அதிகமாகக் காணப்படும். பால் சாப்பிட்டால் சிறுநீரகத்தில் கல் உருவாகும் என்று நம்புகின்றனர். இதற்கு ஆதாரம் எதுவும் கிடையாது. உண்மையில் பால் அதிகம் குடித்து வந்தால் கல் உருவாவதைத் தவிர்க்க முடியும். என சில மருத்துவர்கள் கூறுகின்றனர்.

## நீரிழிவு நோயைப் போக்கும் துளசி இலைகள்— ஆய்வு

துளசி இலையில் உள்ள முக்கியமான சத்து ஒன்று நீரிழிவு நோயைக் குறைப்பதாக இந்தியா ஆந்திர மாநில குண்டூர் மாவட்டத்தில் உள்ள விக்னான் பல்கலை மாணவர்கள் குழு ஆய்வு செய்து கண்டுபிடித்துள்ளனர்.



துளசி இலையில் உள்ள 'ஆசிமம் சாங்டம்' என்ற சத்து நீரிழிவு நோயைக் குறைப்பதில் வல்லது என்பதை ஆய்வு பூர்வமாக நிரூபித்துள்ளனர்.

நீரிழிவுநோயால் இந்தியாவில் சுமார் 4 கோடி பேர் பாதிப்படைந்துள்ளனர். நீரிழிவு நோய் அதன் உச்சத்தில் இருதயம், கண்கள், கிட்னி, நரம்புகள் மற்றும் பாதம் ஆகியவற்றில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது.


விக்னான் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர்.ஜி. முரளிகிருஷ்ணன் தலைமையிலான இந்த ஆய்வுக்குழுவினர் துளசி இலையின் சில அபூர்வ சக்திகளைக் கண்டு பிடித்துள்ளனர்.

ஆய்வில் எலிகளைப் பயன்படுத்திய இந்த ஆய்வுக்குழு முதலில் ஸ்ட்ரெப்டோ சோசின் என்ற இரசாயனத்தைப் பயன்படுத்தி எலிகளுக்கு குளுக்கோசின் அளவை அதிகரித்துள்ளனர். பிறகு துளசி இலையில் இவர்கள் கண்டுபிடித்த இந்த முக்கியமான மருந்தை நாளொன்றுக்கு ஒரு முறை 30 நாட்களுக்குக் கொடுத்து வந்தனர்.

இந்த ஆய்வின் முடிவில் குளுக்கோசின் அளவு குறைக்கப்பட்டிருந்ததோடு முக்கிய உடலுறுப்புக்களான கிட்னிகள், மற்றும் லிவர் ஆகியவை இந்தத் துளசி மருந்தால் பாதுகாக்கப்பட்டிருப்பதும் தெரியவந்தது.

துளசி இலையின் மருத்துவக் குணங்கள் பற்றி சுமார் 5.000 ஆண்டுகளுக்கு முன்பே கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்தியப் புராணங்களில் பத்ம புராணம் துளசியின் பலன்கள் பற்றி நிறைய பேசியுள்ளது.

ஆயுர்வேத சிகிச்சையில் துளசி பல்வேறு நோய்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டு வருகிறது. துளசியில் உள்ள யூஜினால் என்ற எண்ணெய்ச் சத்து அழற்சியிலிருந்து பாதுகாக்கிறது. மூச்சுக் குழல் தொடர்பான நோய்களுக்கு துளசி இலையின் பலன்கள் ஏற்கனவே நிரூபிக்கப்பட்ட ஒன்று. அதில் உள்ள 'அர்சாலிக்' அமிலம் ஒவ்வாமை நோயைத் தீர்க்கப் பயன்படுகிறது. அலர்ஜி. மற்றும் ஆஸ்மா, உடல் நோய்த் தடுப்புச் சக்திகளில் துளசி இலைகள் முக்கியப் பங்காற்றுவதும் ஏற்கனவே அறியப்பட்டவைதான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்களிடம் சரணாகதியாகும் ஆண்கள்!

## பித்தன் பதில்கள்



தி.உமா,
இருபாலை.

**கேள்வி:** இன்றைய ஆண்களில் பெரும்பாலானோர் பெண்களிடம் சரணாகதி ஆகிவிடுகிறார்களே, இது பற்றி என்ன நினைக்கிறீர்?


**பதில்:** எத்தனையோ ஆண்டுகளாகத் தவமிருந்து விசுவாமித்திரர் தேடிய வலிமை ஒரேயொரு நொடியில் மேனகையிடம் பறி போனது பழங்கதை. அன்றிலிருந்து இன்று வரை நிலைமை இதுதான்.

வே.இயல்வாணன்,
மட்டக்களப்பு.

**கேள்வி:** காதல் தோற்றால் அதனால் பாதிப்புக்குள்ளாவது ஆண்களா? பெண்களா?

**பதில்:** சேலை முள்ளில் சிக்கிக் கொண்டாலும், முள் சேலையில் சிக்கிக்கொண்டாலும் பாதிப்பு சேலைக்குத்தான்.

ரா.கணபதி,
டிக்கோயா.



**கேள்வி:** வயதுக்கு வந்த தம் பெண்பிள்ளைகளை டியூசன் வகுப்புகளுக்கு அனுப்பிவிட்டு வகுப்பு முடிந்ததும் வாசலில் காத்திருந்து கூட்டிச் செல்லும் அப்பா, அம்மா குறித்து என்ன நினைக்கிறீர்?

**பதில்:** பருந்துகளிடமிருந்து குஞ்சைக்காக்கும் கோழிகள்.

ம.வேலாயுதம்,
பரந்தன்.



**கேள்வி:** காதல் மாளிகையின் முதற்படியில் கால் வைத்தவன் ஏன் வெற்றி பெறுவேனா என்று கூறமுடியுமா?

**பதில்:** அவசரப்பட்டு முன்னேற முயன்றால் வழுக்கிவிழ நேரக் கூடும். மெதுமெதுவாக முன்னேறப் பாரும்.

த.இந்திராணி,
மன்னார்.

**கேள்வி:** பழையவற்றை மறந்துவிட ஒரு வழி சொல்லுங்களேன் பித்தரே?

**பதில்:** பழைய குப்பைக்கு மேல் புதிய குப்பைகளைக் கொட்டி வந்தால், பழைய குப்பை நாளடைவில் தானாக மக்கிப்போய்விடும்.



ந.வே.நமசிவாயம்,
கல்முனை.

**கேள்வி:** சகோதர பாசம் எப்போதும் நிலைக்குமா பித்தரே?

**பதில்:** திருமணமானதும் பாதி குறையும் பிள்ளைகள் பிறந்ததும் மீதி குறையும். ஆனால் இந்த விடயத்தில் விதி விலக்குமுண்டு.



ப.ரதி,
பூநகரி,

**கேள்வி:** பெற்றோர் மகளுக்குச் சீதனமாகக் கொடுத்த நகைகளை அவளது கணவன் தட்டிப்பறித்து விற்றுச் செலவு செய்வது நியாயமா பித்தரே?

**பதில்:** நீர் இந்த விடயத்தில் அனுபவப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. என்னதான் இருந்தாலும் தனது மனைவியின் சீர்வரிசையில் கணவன் கைவரிசை நியாயமல்ல.

குரா.அஞ்சலோ,
யாழ்ப்பாணம்.

**கேள்வி:** எதற்கெடுத்தாலும் சீறிச் சினக்கும் கணவனோடு பெண்களால் மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்த இயலுமா பித்தரே?

**பதில்:** என்ன செய்வது கழுதைக்கு வாழ்க்கைப்பட்டால் உதைக்கு அஞ்சலாமா?



## சொற்சிலம்பம் போட்டி இல: 499

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | ■ | 10 | | ■ | 11 | |
| 12 | | 13 | | ■ | 14 | | ■ |
| | ■ | 15 | | 16 | | ■ | 17 |
| ■ | 18 | | ■ | 19 | | 20 | |
| 21 | | | 22 | | ■ | 23 | |
| 24 | | ■ | | ■ | 25 | | |

அனுப்புபவர் பெயர்:.......................................................
விலாசம்:.......................................................
.......................................................
கையொப்பம்:.......................................................

### மேலிருந்து கீழ்

01. உண்ணாதிருப்பது
02. ஜாதகத்தைக் கணித்துப் பலன் கூறுபவர்
03. வாழ்
04. கூறு
05. புதினம்
06. மாத்திரை
08. விண்மீன்
10. கூடாதது அல்ல
13. தீயில் எரிப்பது
14. நிகழ்கால நாள்
16. அழித்தல்
17. சிரசில் வழுதப்பட்டது
18. தீவிரமான நிலைமை
20. உலோகத்தை மெல்லிய படையாக உருவாக்கினால் வருவது
21. ஆதி மனிதன் வாழ்ந்தது இங்கே
22. புரவி

### இடமிருந்து வலம்

01. கலந்துரையாடல்
04. ஒத்தாசை
07. இதைக் கொழுத்தி நறுமண புகை வாசனை பெறமுடியும்.
08. பொன், வெள்ளி போன்றவற்றை உரைத்துப் பார்ப்பது இதில்
09. வழக்கில் மனுதாரர்
10. மத்தி
11. ஒன்றை மட்டை வைக்க பின்னுவது
12. சாய்தல்
14. வீடு
15. பதையும் சேர்ந்திருப்பது
18. பாரமான
19. கட்டுப்பாடில்லாமல் அலைபவன்
21. தாய், தகப்பன், பிள்ளைகள் சேர்ந்த தொகுதி
23. குரங்கு
24. கணவனை இழந்த நிலைமை
25. தங்குமிடம்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 499

சொற்சிலம்பம் சொற்சிலம்பம் 499 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் திகதி 2011 ஆண்டு டிசம்பர் 28ஆம் திகதி ஆகும். [illegible] 01 ஆம் திகதி [illegible] அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். [illegible] விடைகளை சரியாக எழுதியிருப்போர் [illegible] பரிசுக்குரியவர்களாக தெரிவு செய்யப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
சுடர் ஒளி யாழ். அலுவலகம்,
561, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி இல.496 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01.விவேகம், 02.வாட்டு, 03.தழும்பு, 04.அழகன், 05.முகம், 06.தும்பிக்கை, 10.ரத்திரி, 13.தண், 14.பத்தினி, 16.நழுவு, 17.கருகு, 18.திரை, 19.குளம், 21.கரு

**இடமிருந்து வலம்**

01.விவாதம், 04.அருது, 07.வேட்டி, 08.கழகம், 09.கரும்பு, 11.கம்பி, 12.புத்தகம், 15.திண், 16.நகை, 17.கந்திரி, 19.குடி, 20.முதிலை, 21.கனப்பு, 22.குனி, 24.கரும்பு

### போட்டி இல. 495 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு**
கா.குடராசா,
முத்துக்குமாரசாமி கோவில்,
திருகோணமலை.

**2 ஆம் பரிசு**
திருமதி. தவரா் யமுனாநாதன்,
இல 16/1 கோணர் றோட்,
மட்டக்களப்பு.

**3 ஆம் பரிசு**
அ.யூட்ஸ் சுகந்தகுமார்,
இல 43/2.சிவன் கோவில் வீதி,
தோணிக்கல் வவுனியா.

### பாராட்டுப் பெறுவோர்

(1) பாமினி சிறிவிஜயா,
இல.275/3,ருத்திரா மாவத்தை,
கொழும்பு-06

(2) க.கமலேஸ்வரன்,
இல.791 கட்சன் வீதி, வட்டக்கச்சி.

(3) சு.அரவிந்த்,
இல.176/10, ஜெம்பட்டா தெரு,
கொழும்பு -13

(4) கே.ஏ.என்.இன்வம்,
இல.14,புளியடி குறுக்கு வீதி,
ஏறாவூர் -06

(5) எச்.எல். யூ.ஏ.ஜெனனை.
இல.486/A,கம்பியாவத்தை,
கெனி ஓயா.

(6) விஸ்வகுமார் விஷ்ணுஜன்,
சிவகுருவீதி,கேணியடி,
கொக்குவில் மேற்கு.

(7) திருமதி தவனாம்பிகை நாகேந்திரன்,
இல.11-3/1, நெல்சன் இடம்,
வெள்ளவத்தை, கொழும்பு -06

(8) ஜே.ஜொயிட்சன்,
இல.20, ஹேன் முல்லை,
கொச்சிக்கடை.

(9) தி.கந்தையா,
இல.11-5/1, சென்லோறன்ஸ் வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06

(10) சி.நிசாந்தன்,
தரம் 6K,யாழ். இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் சுடர்

படத்திற்கு பொருத்தமான வர்ணம் பூசி அழகு படுத்துங்கள்



**படத்தை நன்கு கவனித்து கீழே கேட்கப்படும் கேள்விகளுக்கு சரியாக விடை காணுங்கள்.**

1. இறகுப் பந்து எங்கே உள்ளது?
2. இந்த படத்தில் ஒரு தவறு உள்ளது. அது என்ன?
3. பறவையை தாக்க பயன் படும் 'கேட்டா பெல்ட்' எங்கே உள்ளது?
4. சுவரிலுள்ள எழுத்துக் களை A முதல் Z வரை வரிசையாக இணைக் கவும்.
5. டென்னிஸ் பெட் நான்கு உள்ளன. அவை எங்கே உள்ளன?



## அப்பம் பங்கிட்ட குரங்கு!

இரண்டு பூனைகள் ஒற்றுமையாக இருந்தன. என்ன உணவு கிடைத்தாலும் பங்கிட்டுச் சாப்பிட்டன. ஒரு நாள் இரண்டும் ஒரே சமயத்தில் ஒரு அப்பத்தைக் கண்டன. அது நெய் அப்பம். அப்பத்தின் வாசனை சுயநலமாய் செயல்பட வைத்தது. அப்பத்தை முதன் முதல் பார்த்தது நான் தான்! அதனால் அப்பம் எனக்குத்தான். போனால் போகிறதென்று உனக்கும் ஒரு விள்ளல் தருகிறேன்!" என்று இரண்டுமே வாதிட்டன.

முடிவில், சரி! நாமே பேசிக்கொண்டிருந்தால் சரி வராது. யாராவது மத்தியஸ்தரிடம் போவோம்!" என்று முடிவு செய்து புறப்பட்டன. வழியில் ஒரு குரங்கைக் கண்டன.




அதனிடம் போய், குரங்காரே! எங்களுக்கு ஒரு அப்பம் கிடைத்திருக்கிறது. அதைச் சமமாய் பங்கிட்டு உதவ வேண்டும்!" என கேட்டுக்கொண்டன.

குரங்கு ஏமாற்றும் குணம் கொண்டது. உள்ளுக்குள் மகிழ்ச்சியோடு வெளியில் சலிப்போடு ஒப்புக் கொண்டது. எங்கிருந்தோ ஒரு தராசைக் கொண்டுவந்தது. அப் பத்தை வேண்டுமேன்றே ஒரு பாதி பெரியதாகவும், மறுபாதி சிறியதாகவும் இருக்கும்படி பிரித்தது. அடாடா! இது பெரியதாகிவிட்டதே!" என்று பெரிய துண்டு அப்பத்தைக் கூடுதலாகக் கடித்தது. இப்போது சின்னத்துண்டு பெரியதாகி விட்டது. இப்போது அதைக் கடித்தது.

பூனைகளுக்கு குரங்கின் நோக்கம் புரிந்துவிட்டது. அதைச் சொன்னால் கடித்துக் குதறிவிடுமே! "அண்ணே! இனிமேல் நாங்கள் சண்டை போடமாட்டோம். மீதியிருக்கும் இரு துண்டு அப்பத்தையும் எங்களிடம் ஆளுக்கொன்றாகத் தந்துவிடுங்கள்!" என்று கெஞ்சின.

குரங்கு கோபமாக, "ஓஹோ! நான் மடையனென்று எண்ணிவிட்டீர்களோ? இதற்குள் எத்தனை பழங்களைப் பதம் பார்த்திருப்பேன்! வேலையற்றா தீர்ப்பு சொல்ல வந்தேன்? இத்தனை நேரம் உங்கள் வழக்கை விசாரித்ததற்கான கூலியாக இதைப் பெரியமனதுடன் ஏற்கிறேன்!" என்றபடி மீதியிருந்த அப்பத்துண்டுகளை வாயில் போட்டுக்கொண்டது.

பூனைகள் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு சென்றன. என்ன செய்ய முடியும்? போனால்போகிறதென்று விட்டுக்கொடுத்திருந்தால் நாமே அப்பத்தை ருசித்திருக்கலாமே என வருந்தின. இப்போது உணர்ந்து என்ன பயன்? விட்டுக் கொடுத்து வாழ்வதே வெற்றிக்கோட்டையின் அத்திவாரம்!


## என்ன செய்யும் 4 சின்ன மைனா?




விடைகள்
1. மரக்கிளையில் உள்ளது.
2. வாசல் பாதையில் படி உள்ளது.
3. மரக்கிளையில்
5. இரண்டு சிறுவர் கையில், பெண்ணின் பாதையில். பெண்ணின் பூந்தொட்டியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிருள்ள ஓவியங்களை உருவாக்கும் பெண்







மோனாலிசா போன்ற உயிரோட்டமான ஓவியங்களைப் பார்த்துள்ளோம். இங்கே உயிருள்ள ஓவியத்தைப் பார்க்கிறோம். அமெரிக்காவின் வோசிங்டனைச் சேர்ந்த ஓவியக் கலைஞரான 24 வயதாகும் அலெக்ஸா மேடி எனும் பெண் உயிருள்ளவர்களை ஓவியமாக்குகிறார்.

# உலகின் இரகசிய தீவுகள்



சோவல்லே தீவு-துருக்கி







பெங்கு தீவுகள் தாய்வான்

நாம் இருக்கும் நாட்டிலேயே பல சுவாரஸ்யமான, விசித்திரமான இடங்களை பற்றி அறிந்திருக்க வாய்ப்பில்லை. சில இடங்கள் இன்று வரைக்கும் யாராலும் அறியப்படாமலும் காணப்படுகின்றன. அதேபோல்தான் உலகில் சில இதுவரை கண்டறியப்பட்டிராததும், தற்போது கண்டறியப் பட்டதுமான கண்கவர் இரகசியத் தீவுகள் உள்ளன. அவற்றுள் சில உங்களுக்காக.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காலத்தால் அழியாத பூச்சாடிகள்


வீட்டிலும், பொது இடங்களிலும் பூ மரங்களை நாட்டி அழகு பார்ப்பதற்கு நாம் செயற்கையாக அழகிய சாடிகளை உருவாக்கி பயன்படுத்துவோம். ஆனால் இங்கே பாருங்கள் குன்றுகளினால் ஆனா இய்றகை பூச்சாடிகள் எவ்வளவு வனப்பாக இருக்கின்றது. இப்பூச்சாடிகளிலுள்ள மரங்களுக்கு தண்ணீர் ஊற்றவோ, பசளை இடவோ தேவையில்லை போலும்...















SONDERVERKAUF

Möbel Ferrari

HINWIL

Tel. 044 931 20 40
info@moebel-ferrari.ch
moebel-ferrari.ch

Öffnungszeiten
Montag-Freitag
9.00-20.00
Samstag
9.00-18.00



590.-
EINFÜHRUNGSPREIS

NENA
Komplette Polstergruppe
Textil-Leder weiss
Stoff grau

NEU!

SONNTAG OFFEN!
18
10:00 - 17:00
DEZEMBER

Möbel zum Schlafen, Essen und Wohnen. Benvenuti a Hinwil.

0.0% Direkt Finanzierung


இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பி[illegible] பிறைஸ் ஸ்தாபனத்தினால் 2011, டிசம்பர் 11 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org